விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 290 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 18 புதன்கிழமை (05.10.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## விலைகள் அதிகரிப்பு

### கோதுமை மா விலை மீண்டும் உயர்வு

(கொழும்பு)

சமூக் பாதுகாப்பு ஒத்துழைப்பு வரி அறவிடப்பட்டமையைத் தொடர்ந்து 15

### கையடக்கத் தொலைபேசி, துணைசாதனங்களின் விலைகளும் எகிறியது

(கொழும்பு)

சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் அனைத்து 15

### உள்நாட்டு பால் மா விலைகள் அதிகரிப்பு

03ஆம் பக்கம் பார்க்க

### உணவுகளின் விலை சடுதியாக அதிகரிப்பு

(கொழும்பு)

கொத்து, ப்ரைட் ரைஸ் மற்றும் 15

# பல்கலை மாணவர்கள் அரசுக்கு எதிராக போராட்டம்

## கண்ணீர்ப் புகை, நீர்த்தாரை பிரயோகம்



(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக் கழக மாணவர்கள் அரசுக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை முன்னெடுத்தனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

கொழும்பு - கண்டி பிரதான வீதியை இடைமறித்து களனி பல்கலைக்கழகத்திற்கு முன்னதாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகேவை விடுதலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் 15



## நாட்டின் வங்குரோத்து நிலைக்கு

# ராஜபக்ஷக்களே முழுக் காரணம்

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டின் வங்குரோத்து நிலைக்கு ராஜபக்ஷக்களே முழுக்காரணம் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் விநியோகத்தில் எவ்வித தடையும் ஏற்படாது

### எரிசக்தி அமைச்சர் காஞ்சன



(கொழும்பு)

எரிபொருள் விநியோக நடவடிக்கைக்கு எவ்விதத் தடையும் ஏற் 15

## நாட்டின் நிலைமை தொடர்பில் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி நாளை உரை

(கொழும்பு)

நாட்டின் சமகால பொருளாதார நிலை தொடர்பில் ஜனாதிபதி 15

## சுழிபுரம் கடற்பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் கடற்பகுதி 15

## போதைக்கு அடிமையானவர்கள் பாராளுமன்றத்திலும் உள்ளார்கள்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில்போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் இருப்பதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

உத்தேச புனர்வாழ்வுப் பணியக சட்டத்தின் அடிப்படையில் சாதாரண மக்களை போதைப் பொருள் பரிசோதனைக்கு உட்படுத்து 15

## ரூ.200 - 300வரை எரிவாயு விலை குறையும்

(கொழும்பு)

12.5 கிலோகிராம் 15

## ஜெனிவா தீர்மானத்துக்கு சர்வதேசம் ஆதரவு வழங்க வேண்டும்

மனித உரிமை கண்காணிப்பகம் வேண்டுகோள்




05ஆம் பக்கம் பார்க்க

## உயர்பாதுகாப்பு வர்த்தமானி இரத்து மனித உரிமை ஆர்வலர்களின் வெற்றி

### பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

முழுக்கொழும்பையும் இராணுவ தளமாக மாற்றும் வகையில் ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட அதியுயர் பாதுகாப்பு வலய வர்த்தமானி அறிவித்தல் வாபஸ் பெறப்பட்டமை மனித உரிமையில் அக்கறை கொண்ட அனைவருக்கும் கிடைத்த பாரிய வெற்றி என முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜி.எல். 15

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வேலை ஆட்கள் தேவை

நெல்லியடியில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு கொத்து, பிறைற்றைஸ் தயாரிக்கத் தெரிந்தவர்கள் உடனடியாக வேண்டும். தங்கி நின்றும் வேலை செய்ய முடியும்.

தொடர்பு (C-5033)

**074 379 1736**

## பணிப்பெண் தேவை

இரண்டு பேர் உள்ள குடும்பத்திற்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்ய பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (C-5031)

**074 264 1500**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு**

- A9 வீதியிலிருந்து 200 M தூரம்
- 20 அடிப் பாதையுடன்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நாவற்குழி சந்தியிலிருந்து 500M தூரத்தில்
- 1 பரப்பின் விலை - 3 இலட்சம் மட்டும்
- பார்வையிடும் நேரம் - காலை 9.00 இருந்து மாலை 6.00 மணி வரை

(13006)

**077 874 8135**

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியர்
திரு. தெய்வேந்திரன் பிரபாகரன்
அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர் **வேலுப்பிள்ளை தெய்வேந்திரன்**

அவர்கள் நேற்று காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (C-5032)

**யாழ். இந்து மகளிர் கல்லூரிச் சமூகம்**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடியில் 8 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**


- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50M தூரம்)
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- கைதடிச் சந்தியிலிருந்து 500M தூரத்தில்
- 18 அடிப் பாதையுடன் நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம்
- வீடுகள், திருமண மண்டபம் அமைக்க உகந்த சூழல்
- ஒரு பரப்பின் விலை 6 இலட்சம் (6,00,000/-) மட்டும்
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் - காலை 9 மணி முதல் மாலை 6 வரை

(13006)

**077 911 6983, 077 076 0389**

## மரண அறிவித்தல்

# நடராஜா நவரட்ணம்



திருநெல்வேலி முடமாவடியைப் பிறப்பிடமாகவும் ஆறுகால்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட நடராஜா நவரட்ணம் அவர்கள் நேற்று (04.10.2022) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா - அன்னலக்சுமி தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான Dr.சண்முகம் - மகேஸ்வரி தம்பதியரின் மூத்த மருமனும் காலஞ்சென்ற சந்தரேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அருள்ஜோதி மற்றும் தக்ஷினி, தவஜோதி ஆகியோரின் அன்புத் தந்தையும் ராதிகா, ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் தனஞ்செயன், சஞ்சீவன், சிந்துஜா, ஆரணிகா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் பாக்கியலக்சுமி, ராஜேஸ்வரி, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரி, மனோகரன், திருமகள், விஜயபாலன், ஸ்ரீஸ்கந்தா ஆகியோரின் மைத்துனரும் மற்றும் பாஸ்கரன் சிறீகுமார், ரஞ்சன், ஸ்ரீதரன் ஆகியோரின் மைத்துனரும் தாரணி, Dr.கஜானனன், ஸ்வஸ்திகா, Dr.பிருகஸ்வினி ஆகியோரின் அன்பு மாமனாரும் பமித்ராவின் பெரிய தகப்பனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (05.10.2022) புதன்கிழமை மதியம் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"மகேஸ்வரிவாசா"
மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்
தொ.பே:- 076 891 9763

(13002)

## மரண அறிவித்தல்

# தங்கவடிவேலு இராசம்மா

பிறப்பு - 09.07.1954 இறப்பு - 04.10.2022



புலோப்பளை பளையை பிறப்பிடமாகவும் பத்தானை அல்வாய் கிழக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கவடிவேலு இராசம்மா அவர்கள் நேற்று (04.10.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தம்பிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும் கந்தையா சிவகொழுந்து தம்பதியினரின் மருமகளும் கந்தையா தங்கவடிவேலுவின் அன்பு மனைவியும் மென்மொழி, ஐங்கரன், வேனுகானன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுதாகரன் ஜிவிதா, சோபனா ஆகியோரின் மாமியும் யக்சாலினி, திசாகரி, சதுர்த்திகன், அகிஷயா, அட்ஷயா, அபூர்வன், அகரன் ஆகியோரின் பேத்தியுமாவார். நவமணி, தவமணி, காலஞ்சென்ற நாகலிங்கம், காலஞ்சென்ற நாகமலர், சரசு, விரசிங்கம், லோகநாதன், கமலேஸ்வரி, கிருஷ்ணநாதன் அகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற வேலும் மயிலும் காலஞ்சென்ற கஜேந்திரன், மிதிலாதேவி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.10.2022) புதன்கிழமை நண்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதன் (மருமகன்) : 077 659 9577
ஐங்கரன் (மகன்) : 076 140 5181
வேனுகானன் (மகன்) : 077 788 5307

(C-5034)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக நாடுகளின் வரைவுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால்

# போர்க்குற்ற விசாரணையில் இருந்து இலங்கை தப்ப முடியாது

## பா.ம.க தலைவர் அன்புமணி ராமதாஸ்



(சென்னை)

**அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள் கொண்டுவந்துள்ள வரைவுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், போர்க்குற்ற விசாரணையிலிருந்து இலங்கை தப்ப முடியாது என்ற நிலை உருவாகும் என பா.ம.க தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்தார். நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

இன்றில்லாவிட்டாலும் என்றாவது ஒரு நாள், ஏதாவது ஒரு நாட்டின் நீதிமன்றத்தில் ஈழத் தமிழர்களை படுகொலை செய்ய திட்டம் வகுத்து செயற்படுத்திய கொடுங்கோலர்கள் தண்டிக்கப் படுவதையும் இந்தத் தீர்மானம் உறுதி செய்யும்.

மத்திய அரசு விரும்பினால் இலங்கை போர்க்குற்ற விசாரணையை இந்தியாவிலேயே கூட நடத்த முடியும்.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா மனித உரிமை பேரவையின் 51 ஆவது கூட்டத்தில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, போலந்து உள்ளிட்ட 10 உறுப்பு நாடுகளும் உறுப்பினர் அல்லாத 16 நாடுகளும் இணைந்து வரைவுத் தீர்மானத்தை தாக்கல் செய்துள்ளன. ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் 2023, 2024 ஆம் ஆண்டுகளில் நடைபெறவுள்ள 53, 54, 55, 57 ஆவது கூட்டத் தொடர்களில் இலங்கையின் நிலைமை குறித்து மீண்டும் விவாதிப்பதற்கு இந்த தீர்மானம் வகை செய்துள்ளது.

இதன் மூலம் பன்னாட்டளவில் மீண்டும் மீண்டும் இலங்கை கண்காணிப்புக்கும் கேள்விக்கும் உள்ளாக்கப்படும். இது இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஒன்றரை இலட்சம் அப்பாவி தமிழர்களின் குடும்பங்களுக்கு நீதி பெற்றுத் தருவதற்கான முயற்சிகள் வலுவடைவதற்கு நிச்சயம் உதவும்.

இத்தகைய சிறப்பு மிக்க தீர்மானம் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டிய கடமையும் பொறுப்பும் இந்தியாவுக்கு உண்டு. இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற போரில் கொடூர படுகொலை செய்யப்பட்ட ஒன்றரை இலட்சம் தமிழர்களின் குடும்பங்களுக்கு 13 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் நீதி கிடைக்கவில்லை என்பது மனித உரிமையில் அக்கறை கொண்டவர்கள் அனைவருக்கும் வலியையும் வேதனையையும் ஏற்படுத்துகிறது. இதற்கு முடிவு கட்டி போர்க்குற்றவாளிகளை தண்டிப்பதற்கான ஐ.நா மனித உரிமை ஆணையத்தின் நடவடிக்கைகளை இந்திய அரசு ஆதரிக்க வேண்டியது அவசியம் ஆகும்.

ஐ.நா மனித உரிமை பேரவையின் நடப்புக் கூட்டத்தில் கடந்த செப்டெம்பர் 12 ஆம் திகதி உரையாற்றிய இந்திய தூதர், இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு அதிகாரம் வழுங்கப்படாததை சுட்டிக்காட்டியதுடன், ஒருங்கிணைந்த இலங்கைக்குள் தமிழர்களுக்கு நீதி, அமைதி, சமத்துவம் மற்றும் கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்ய வேண்டும் என்பது தான் இந்தியாவின் நிலைப்பாடு. இதை இலங்கை உறுதி செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார். இந்தியாவின் இந்த நிலைப்பாடு வரவேற்கத் தக்கது.

ஈழத்தமிழர்களுக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என்பதற்காக ஐ.நா மனித உரிமை பேரவையில் குரல் கொடுத்த இந்தியா, ஈழத்தமிழர் படுகொலைகளுக்கு நீதி பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளுக்கும் ஆதரவு அளிக்க வேண்டும். அதற்காக ஐ.நா மனித உரிமை பேரவையில் நாளை ஒக்டோபர் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள வாக்கெடுப்பில் இலங்கை போர்க்குற்றம் தொடர்பாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை ஆதரித்து இந்தியா வாக்களிக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன் இவ்வாறு அன்புமணி தெரிவித்துள்ளார். (நி)

# புதிதாக 8000 பேர் ஆசிரியர் சேவைக்கு நியமனம்

## கல்வி அமைச்சர் சுசில்



(கொழும்பு)

அடுத்த வருடத்தின் முதல் பகுதியில் 8,000 ஆசிரியர்களை புதிதாக பாடசாலைகளுக்கு நியமிக்க தீர்மானித்துள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

அது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்த அவர், கல்வியியற் கல்லூரிகளில் அதற்கான பரீட்சைகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன் அதற்கிணங்க அடுத்த வருட ஆரம்ப பகுதியில் 8000 ஆசிரியர்களை புதிதாக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அதேவேளை ஆசிரியர்சேவையில் இணைந்து கொள்வதற்கு விருப்பமுடைய அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. பரீட்சை ஒன்றை நடத்தி அதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் அடிப்படையில் மாகாண சபை பாடசாலை ஆசிரியர்களாக அவர்களை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அவர்களை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொண்டதன் பின்னர் மூன்று வருடங்களுக்குள் தேசிய கல்வி நிறுவனத்தின் ஒரு வருட டிப்ளோமா பாட நெறியை பூர்த்தி செய்வதற்கு சந்தர்ப்பமளித்து பயிற்சி ஆசிரியர்களாக அவர்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (நி)

# ஜெனிவா செல்கிறார் அமைச்சர் அலிசப்ரி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் நாளை மறுதினம் 7 ஆம் திகதி நிறைவடைகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடரின் இறுதி நிகழ்வில் பங்கேற்க வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலிசப்ரி ஜெனிவா நோக்கி பயணமாகவுள்ளார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் இலங்கை தொடர்பில் கனடா, ஜேர்மனி மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இணைந்து தயார் செய்துள்ள இலங்கை தொடர்பிலான அறிக்கை நாளை மறுதினம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல் ஆகியன வற்றை அடிப்படையாகக்கொண்டு குறித்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுகின்றது. (நி)

# உள்ளூர் பால்மாவின் விலையும் அதிகரிப்பு

(கொழும்பு)

உள்ளூர் பால்மாவின் விலையை அதிகரிக்க பால்மா உற்பத்தியாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதற்கமைய 450 கிராம் உள்ளூர் பால்மா பொதியின் விலை 125 ரூபாவினாலும் 850 ரூபாவாக இருந்த 450 கிராம் பால்மா பொதி 975 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சந்தையில் தற்போது உள்ளூர் பால்மாவிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி)

## விலை அதிகரிப்பு காரணமாக மதுபாவனையில் வீழ்ச்சி

(கொழும்பு)

தொடர்ச்சியான விலை அதிகரிப்பு காரணமாக சட்டரீதியான மதுபாவனை சுமார் நாற்பது வீதத்தால் குறைந்துள்ளதாக கலால் ஆணையாளர் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மதுபான விற்பனை 25 முதல் 30 சதவீதம் வரை குறைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், சட்டரீதியாக மதுபானங்களின் விலையேற்றம் காரணமாக மக்கள் கசிப்பு மற்றும் போதைப்பொருள் பாவனைபில் ஈடுபடுவதாகவும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார். (நி)

## கட்டணம் செலுத்தாததால் காத்துக்கிடக்கும் கப்பல்கள்

(கொழும்பு)

நாட்டை வந்தடைந்துள்ள டீசல் மற்றும் மசகு எண்ணெய் ஏற்றிய 2 கப்பல்களுக்கு இதுவரை கட்டணம் செலுத்தப்படவில்லை என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

குறித்த கப்பல்களில் 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் மற்றும் ஒரு இலட்சம் மெற்றிக் தொன் மசகு எண்ணெய் காணப்படுவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே மற்றுமொரு கப்பலிலிருந்து 37 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோலை தரையிறக்கும் நடவடிக்கைகள் நேற்று முன்தினம் நிறைவடைந்துள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய விளையாட்டு தெரிவுக்குழு நியமனம்




விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால்ஏழுபேர்கொண்ட தேசிய விளையாட்டு தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

தேசிய விளையாட்டுத் தேர்வுக் குழுவின் தலைவராக பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் ஷவேந்திர சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். தேசிய விளையாட்டுத் தேர்வுக் குழுவின் மீதமுள்ள உறுப்பினர்களாக, அர்ஜுன் ரிஷ்ய பெர்னாண்டோ - செயலாளர், சத்திரசிகிச்சை ஆலோசகர்மருத்துவர் மையா குணசேகர - உறுப்பினர், பிரசன்னா சந்தித் - விளையாட்டு அமைச்சின் பிரதிநிதி, சனத் ஜயசூரிய - உறுப்பினர், தேசிய ஒலிம்பிக் கமிட்டி செயலாளர் - உறுப்பினர், திலகா ஜினதாச - உறுப்பினர் / பெண் பிரதிநிதி ஆகியொர் நியமிக்கப்பட்டுள்ளனர். (4)



நடைபெற்றுவரும் வடமாகாண தடகள விளையாட்டுப் போட்டியில் 14 வயது ஆண்களுக்கான தடை தாண்டலில் பளை மத்திய கல்லூரியைச் சேர்ந்த கே.தனதீபன் தங்கப் பதக்கத்தை சுவீகரித்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். (படம்- தேவானந்தன்)

# டெல் அவிவ் ஓபன் டென்னிஸ் ஜோகோவிச் சம்பியன்




டெல் அவிவ் வாட்டர் ஜென் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி இஸ்ரேலில் நடைபெற்று இதன் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் முன்னாள் நம்பர் வன் வீரரும் தற்போது தரவரிசையில் 7 ஆவது இடத்தில் இருப்பவருமான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், குரோஷியாவின் மரின் சிலிச்சை எதிர்கொண்டார். தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஜோகோவிச் 6-3, 6-4 என்ற நேர்செட்டில் மரின் சிலிச்சை தோற்கடித்து சம்பியன் பட்டத்தை வசப்படுத்தினார்.

இந்த வெற்றியை பெற அவருக்கு 1 மணி 34 நிமிடமே தேவைப்பட்டது. 35 வயதான ஜோகோவிச் இந்த ஆண்டில் வென்ற 3 ஆவது பட்டமாகும். இதன் மூலம் இந்த சீசனில் கடினதரை (உள்ளரங்க போட்டி), களிமண்தரை (ரோம் ஓபன்), புல்தரை (விம்பிள்டன்) ஆகியவற்றில் நடந்த போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற முதல் வீரர் என்ற பெருமையை பெற்றார். ஒட்டுமொத்தத்தில் அவர் கைப்பற்றிய 89 ஆவது சர்வதேச ஒற்றையர் பட்டம் இதுவாகும்.

இந்தப் போட்டியில் வென்றதன் மூலம் இத்தாலியில் அடுத்த மாதம் நடைபெறும் "டாப்-8" வீரர்கள் மட்டும் பங்கேற்கும் ஏ.டி.பி. இறுதிச்சுற்று போட்டிக்கு ஜோகோவிச் தகுதி பெற்றார். இரட்டையர் பிரிவின் இறுதி ஆட்டத்தில் ரோகன் போபண்ணா (இந்தியா)-மேட்வி மிடில்கூப் (நெதர்லாந்து) ஜோடி 6-2, 6-4 என்ற நேர்செட்டில் சான்டி யாகோ கான்ஜாலே (மெக்சிகோ)-ஆண்ட்ரஸ் மால்டெனி (ஆர்ஜென்டினா) இணையை வீழ்த்தி சம்பியன் பட்டத்தைச் சொந்தமாக்கியது. (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2711

Search for people, places and things

கலை





ரதி




வருண்




ரமனா




அகாஷ்




வசந்த்

விலகி இருங்கள்
உங்களை ஏமாற்றுபவர்களிடமிருந்து
மதிக்காதவர்களிடமிருந்து
உபயோகப்படுத்துபவர்களிடமிருந்து
விமர்சிப்பவர்களிடமிருந்து
தாழ்த்தி பேசுபவர்களிடமிருந்து

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை தொடர்பான ஜெனிவா தீர்மானத்திற்கு உலக நாடுகள் ஆதரவளிக்க வேண்டும்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வேண்டுகோள்

(கொழும்பு)

**மாற்றத்தையும்பொறுப்புக்கூறலையும் கோரும் இலங்கையர்களிற்கு ஆதரவளிப்பதென்றால் இந்தியாவும் ஏனைய உலக நாடுகளும் தீர்மானத்திற்கு ஆதரவளிக்க வேண்டும் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**




ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானம் இலங்கையில் போர்க்குற்றங்கள் மற்றும் சர்வதேச சட்டத்தின் கீழான ஏனைய குற்றங்கள் குறித்த ஆதாரங்களை சேகரித்து ஆராய்வதற்கான ஐக்கிய நாடுகள் திட்டத்தை நீடிப்பதற்கான ஆணையை இந்த தீர்மானம் கோருகின்றது.

அத்துடன் இலங்கையின் பொருளாதார சமூக நெருக்கடியை தொடர்ந்தும் கண்காணிக்க வேண்டும் எனவும் தீர்மானம் ஐ.நாவை கோருகின்றது என அவர் தெரிவித்துள்ளார்

எனினும் இலங்கை தான் மனித உரிமைகளை பாதுகாப்பதாக தெரிவித்து இதனை எதிர்க்கின்றது.

இலங்கையில் போதியளவு மனித உரிமை பாதுகாப்பு இல்லாதமை குறித்து பல உலக நாடுகள் கரிசனை வெளியிட்டுள்ளன என தெரிவித்துள்ள மீனாக்சி கங்குலி இலங்கையில் மாற்றத்தையும் பொறுப்புக்கூறலையும் கோரும் இலங்கையர்களிற்கு ஆதரவளிப்பதென்றால் இந்தியாவும் ஏனைய உலக நாடுகளும் தீர்மானத்திற்கு ஆதரவளிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார். (நி)

# அரச ஊழியர்களின் சம்பளம் ஒருபோதும் குறைக்கப்படாது

## இராஜாங்க அமைச்சர் சியம்பலாப்பிட்டிய

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கான சம்பளத்தை குறைக்க அரசாங்கம் ஒருபோதும் நடவடிக்கை எடுக்காது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்களுக்கான சம்பள குறைப்பு தொடர்பில் பாராளுமன்றில் நேற்று அறிவிப்பொன்று வெளியிடப்பட்டுள்ளது.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், வேதன குறைப்பு தொடர்பில் வெளியாகும் தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை. அரச ஊழியர்களுக்கான வேதனம் மற்றும் ஓய்வூதியம் என்பவற்றுக்காக அரசாங்கம் மாதாந்தம் 119 பில்லியன் ரூபாவை செலவிடுகிறது.

இதில் ஊழியர்களின் வேதனத்துக்காக 93 பில்லியன் ரூபாவும், ஓய்வூதியத்துக்கு 26 பில்லியன் ரூபாவும் செலவிடப்படுகிறது. வருடாந்தம் 1428 பில்லியன் ரூபாய் அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்துக்காக ஒதுக்கப்படுகிறது.

அதிகரித்துவரும் பணவீக்கத்துக்கு மத்தியில் ஏனையோரை போலவே அரச ஊழியர்களும் கடும் அழுத்தத்துக்கு உள்ளாகி வருகின்றனர். அவர்களின் சம்பளங்களை குறைத்து, அவர்களை மேலும் அழுத்தத்துக்கு உள்ளாக்க அரசாங்கம் ஒருபோதும் நடவடிக்கை எடுக்காது.

எனவே அரச ஊழியர்களின் பணியை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கத்தின் மீண்டெழும் செலவுகளில் அரச ஊழியர்களுக்கான வேதனம் மற்றும் ஓய்வூதியம் என்பன அத்தியாவசியமானது எனக் கருத்திற்கொள்ளப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# சீமெந்து மூடையின் விலை 100 ரூபாவால் குறைப்பு

(கொழும்பு)

50 கிலோ எடையுள்ள சீமெந்து மூடையின் விலையை 100 ரூபாவால் குறைக்க INSEE Corporation மற்றும் INSEE Plus ஆகிய நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன.


இந்த விலை குறைப்பு நேற்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுமானத் துறைக்கு ஓரளவு நிவாரணம் அளிக்கும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி)


# இராசிபலன்

05.10.2022
புரட்டாதி 18, புதன்கிழமை
தசமி முற்பகல் 11.33 மணிவரை
திருவோணம் முன்னிரவு 9.37 மணிவரை
சுபநேரம் 4.32-6.02 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை
விஜயதசமி ,கேதார கௌரி விரதம்
சர்வதேச ஆசிரியர் தினம்
சந்திராஷ்டமம் - திருவாதிரை, புனர்பூசம்


**வளவன்**





தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள்.




நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நெருங்கிய நட்பு இடம்பெறலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.




செய்யும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு, சுபவிரயங்கள் கூடும் நாள்.




பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய தகவல் முடிவில் நன்மை தரும், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.




வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.




சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் போட்டிகள் மாறும்.





விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், பொது வாழ்வில் புகழ் கூடும்.





சாப்பிடக் கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்வீர்கள், பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.





எந்தக் காரியத்திலும் நிதானத்துடன் நடந்து கொள்வது நல்லது, வேலைச்சுமை கூடும், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.




மனநிறைவு கூடும் நாள், நீண்ட நாட்களாக தள்ளிப் போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், உயர் அதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும்.




செய்தொழில் மேன்மையுண்டு, எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.




நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.

உன் மனதைக் கட்டுப்படுத்துவதே உண்மையான தவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயல் பதிவுகளை மேற்கொண்டு

## உரமானியங்களை பெற்றுக்கொள்ளுங்கள்

### கைதடி கமக்கார அமைப்பு

(சாவகச்சேரி)

கைதடி கமநல சேவை பிரிவுக்குட்பட்ட நெற்செய்கையாளர்கள் அனைவரும் இம்முறை வயல்பதிவுகளை மேற்கொண்டு உரமானியங்களை பெற்றுக் கொள்ள முயற்சிக்க வேண்டும் என கமக்கார அமைப்பினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக கமக்கார அமைப்பினர் கருத்துத் தெரிவிக்கையில், சகல நெற்செய்கையாளர்களும் கமக்கார அமைப்புக்கள் ஊடாக பதிவுகளை மேற்கொண்டு உரமானியங்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.

சிறிய நெற்செய்கையாளர்கள் பதிவுகளை மேற் கொள்ளவும்.

உரமானியங்களைப் பெற்றுக்கொள்ளவும் பின்னடிக்கின்ற நிலை காணப்படுகிறது. அந்த தவறை இம்முறை சீர் செய்ய வேண்டும்.

இம்முறை 4 கட்டங்களாக இரசாயன மற்றும் சேதன பசளைகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மிக விரைவாக உரமானியம் இடம்பெற இருப்பதால் இது வரை பதிவுகளை மேற் கொள்ளாத செய்கையாளர்கள் கமக்கார அமைப்புக்கள் ஊடாக விண்ணப்பங்களை மேற் கொள்ளுமாறு மேலும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (4-30)

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 36 ஆவது பட்டமளிப்பு விழா

## நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 36 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி, எதிர்வரும் 6 ஆம், 7 ஆம், 8 ஆம் திகதிகளில், பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. இந்தப் பட்டமளிப்பு விழாவில் 185 பட்டப்பின் தகைமை பெற்றவர்களுக்கும் 2 ஆயிரத்து 46 உள்வாரி மாணவர்களுக்கும் 147 தொலைக்கல்வி மாணவர்களுக்குமாக 2 ஆயிரத்து 378 பேருக்குப் பட்டங்கள் மற்றும் தகைமைச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன

இந்தப் பட்டமளிப்பு விழாவின் முதல் இரண்டு நாட்களும் முறையே மூன்று அமர்வுகளும், மூன்றாம் நாள் முறையே இரண்டு அமர்வுகளுமாக எட்டு அமர்வுகளில் பட்டங்களும் தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

பட்டமளிப்பு விழாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வேந்தர், வாழ்நாள் பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமை தாங்கி பட்டதாரிகளுக்கான பட்டங்களையும் தகைமைச் சான்றிதழ்களையும் தங்கப் பதக்கங்களையும் பரிசில்களையும் புலமைப் பரிசில்களையும் வழங்கிக் கௌரவிப்பார். (4-33-18)

# கசிப்பு வைத்திருந்த சிறுவன்

## நன்னடத்தை பாடசாலையில் ஒப்படைப்பு

()

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை ஊரிப் பகுதியில் மூன்று லீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்ட 15 வயதுடைய பாடசாலை மாணவனை, அச்சுவேலி பகுதியில் அமைந்துள்ள சான்று பெற்ற சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் ஒப்படைக்குமாறு யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்ற நீதிவான் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

குறித்த மாணவன் 3 லீற்றர் கசிப்பு மற்றும் 16 லீற்றர் கோடாவினை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் ஊர்காவற்றுறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார். (4-33)

# பட்டிமன்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச செயலகத்தால் வாணி விழா சிறப்பு நிகழ்வாக இன்று புதன்கிழமை பிரபல பேச்சாளர் பொன்.சுகந்தன் தலைமையில் சிறப்பு பட்டிமன்றம் இடம் பெறவுள்ளது. (4)

# போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை அண்மித்த பகுதியில் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த இளைஞன் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞனை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-33-18)



இலங்கை மற்றும் மாலைதீவுக்கான நியூசிலாந்து தூதுவர் மைக்கேல் ப்பிள்டன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டு துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவைச் நேற்று சந்தித்தார். (படம்: சிவசாந்தன்)

# விஜயதசமி விழா

(குப்பிழான்)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த நவராத்திரி விழாவின் பத்தாம் நாளான விஜயதசமி விழா இன்று புதன்கிழமை சிறப்பாக இடம் பெறவுள்ளது.

காலை.8.30 மணியளவில் வசந்தமண்டப் பூசையைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு வன்னி வாழை வெட்டும் (மகிஷாசுர சங்காரம்) என்பன இடம்பெற்று அதனைத் தொடர்ந்து காலை 9.30. மணிக்கு வித்தியாரம்பம் (ஏடு தொடக்குதல்) நிகழ்வும் நடைபெறும் என மேற்படி ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர். (4-18)



வடமராட்சி கரணவாய் பகுதியில் நேற்றைய தினம் கரவெட்டி சுகாதாரப் பிரிவினரும் பொலிஸாரும் இணைந்து டெங்கு ஒழிப்பு தொடர்பான களத்தரிசிப்புக்களை மேற்கொண்டனர். இதன்போது டெங்கு ஒழிப்பு தொடர்பான அறிவுரைகளும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன. (படம் மகாலிங்கம்)

# முன்பள்ளி கட்டடத்திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் இருபாலைப் பிரதேசத்தில் இன்றைய தினம் காலை 9.30 மணியளவில் அரச முன்பள்ளி கட்டடம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வானது கோண்டாவில் வீதி இருபாலையில் அமைந்துள்ள முன்பள்ளி வளாகத்தில் இடம்பெறவுள்ளது. வலிகிழக்கு பிரதேச சபையின் செயலாளர் இ.பகீரதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சபையின் தவிசாளர் தி.நிரோஸ், சிறப்பு விருந்தினராக சபையின் பிரதித் தவிசாளர் ம.கபிலன் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (4)

# சாவகச்சேரியில் துவிச்சக்கரவண்டி திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் பெண் பணியாளர் ஒருவரின் துவிச்சக்கரவண்டி நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை திருட்டுப் போயிருப்பதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பேருந்து தரிப்பு நிலையத்திற்கு அருகாமையில் துவிச்சக்கரவண்டியை நிறுத்தி விட்டு வேலை நிமித்தமாக சென்று வந்த போதே துவிச்சக்கரவண்டி திருடப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

அண்மைக் காலமாக சாவகச்சேரி நகரப் பகுதி மற்றும் சந்தை வளாகம் ஆகிய இடங்களில் துவிச்சக்கரவண்டி திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-30)

# சைவப்புலவர் செல்லத்துரை அறக்கட்டளை நிதியம் நடத்தும் கலைப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

அமரர்.சைவப்புலவர் சு.செல்லத்துரையின் முதலாம் வருட நினைவு தினம் எதிர்வரும் 22 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதனை முன்னிட்டு சைவப் புலவர் சு.செல்லத்துரை அறக்கட்டளை நிதியத்தினால் கலைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான போட்டிகளும் அகில இலங்கை ரீதியான கலைப்போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

போட்டிகள் தனிப்போட்டி, குழுப்போட்டி என இரு பிரிவாக வகைப்படுத்தப்பட்டு நடைபெறும். தனிப்போட்டியில் பஞ்ச புராணம் ஓதல், அபிநய நடனம், பேச்சு, விநாடி வினா, கதாப்பிரசங்கம் என்பனவும் குழுப் போட்டியில் புராண படலம், வில்லுப்பாட்டு, பட்டிமன்றம், நாடகம் என்பனவும் நடத்தப்படவுள்ளன.

போட்டி நடத்துவதற்கான அனுமதி வலிகாமம் கல்வி வயைக்கல்வி பணிப்பாளரிடம் பெறப்பட்டுள்ளது. போட்டிகள் அனைத்தும் எதிர்வரும் 8, 9 சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியலாயத்தில் நடைபெறும். போட்டிகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் யாவும் பாடசாலைகளுக்கு தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

போட்டி தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 077 197 4332 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொண்டு அறிய முடியும் என சைவப்புலவர் சு.செல்லத்துரை அறக்கட்டளை நிதியம் அறிவித்துள்ளது. (4)

# பட்டமளிப்பு விழாவினை முன்னிட்டு ஒரு வழிப்பாதை


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 36 ஆவது பட்டமளிப்பு விழா நடைபெறும் 6 ஆம் 7 ஆம் 8 ஆம் திகதி வரையிலான மூன்று தினங்களில் போக்குவரத்து தொடர்பான அசௌகரியங்களை தவிர்க்கும் பொருட்டு காலை 8 தொடக்கம் மாலை 6 மணி வரை திருநெல்வேலி சந்தியில் இருந்து கொக்குவில் சந்தியை நோக்கிய ஆடியபாதம் வீதியின் புகையிரத கடவை வரையான பாதை மற்றும் கலட்டி சந்தியிலிருந்து இராமநாதன் வீதி பரமேஸ்வராச் சந்தி வரையான பாதை ஆகியன ஒரு வழிப் பாதையாக பேணப்படும் என்பதை நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.மயூரன் அறிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாட்டில் வன்முறையை கட்டவிழ்த்துவிட்டவர்கள் விடுதலைப்புலிகளும் ஜே.வி.பியினருமே

## தம்மரத்ன தேரர்



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் ஜே.வி. பியினரே நாட்டை சீரழித்து, வன்முறை அலையை கட்டவிழ்த்து விட்டனர் என்று மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் பிரதமகுரு வலவாஹெங் குணவெவே தம்மரத்ன நாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பொருளாதாரத்தை அழிப்பவர்கள் என்று முத்திரை குத்தப்பட்ட நபர்கள் தேச பக்தர்களாக இருக்க முயற்சிப்பதாகவும் மக்களை ஏமாற்றுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மிஹிந்தலை விகாரையில் இடம்பெற்ற சமய நிகழ்வுகளில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

சுதந்திரம் அடைந்ததில் இருந்து நாடு வீழ்ச்சியடைந்தமைக்கு காரணம் அதன் பின் நாட்டை ஆட்சி செய்த அரசியல்வாதிகளே.

சாதாரண மக்கள் போஷாக்கின்மையால் அவதியுறும் வேளையில் ஆட்சியாளர்கள் ஆடம்பர சுகங்களை அனுபவித்து வருகின்றனர்.

எனவே, மக்கள் அவர்களை நிராகரிக்க வேண்டும். மோசடி செய்பவர்களை பாதுகாக்க அதியுயர் பாதுகாப்பு வலயங்களை பிரகடனப்படுத்துவதை விடுத்து மக்களை உயர்த்தி பாதுகாப்பது நாட்டின் பாதுகாவலர் என்ற வகையில் ஜனாதிபதியின் கடமையாகும் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

# உயர்தர பரீட்சையை பிற்போடாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து மனுத்தாக்கல்



(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை பிற்போடாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து உயர் நீதிமன்றம் மற்றும் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில இதனைத் தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடத்தவுள்ளதாக அரசாங்கம் அறிவித்திருந்தது.

இந்நிலையில் பரீட்சையை பிற்போடுமாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் கட்சியின் தலைவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

எனினும் கல்விப் பொதுத் தராதர பத்திர உயர்தரப் பரீட்சையை பிற்போடுவதற்கு எவ்வித தேவையும் ஏற்படவில்லை என கல்வி அமைச்சர் பாராளுமன்றில் அறிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை பிற்போடாதிருக்க அரசாங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானத்தை எதிர்த்து வழக்குத்தாக்கல் செய்யவுள்ளதாக உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (நி)

# ஒரு மில்லியன் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம்

## அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களில் மேலும் ஒரு மில்லியன் பேருக்கு பாடசாலை மதிய உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தும் வகையில் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்குத் தேவையான நிதியை வெளிநாட்டு மானியங்கள் மூலம் வழங்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பூரண சத்தான உணவை வழங்கும் வகையில் 7,926 பாடசாலைகளில் உள்ள 1.08 மில்லியன் மாணவர்கள் இத்திட்டத்தின் இலக்காக உள்ளனர்.

வருடாந்தம் 4 பில்லியன் ரூபாய் செலவில் பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் வேலைத் திட்டத்தை அரசாங்கம் தற்போது நடைமுறைப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-02,றெக்கிளமேசன் முதலாம் குறுக்குத் தெரு, ஆதன இல. 58 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் பிரான்சிஸ் மரியதாஸ் என யாழ். மாநகரசபை ஆதன வரிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் குருநகர் றெக்கிளமேசன் இல. 58,முதலாம் குறுக்குத் தெருவிலிருக்கும் பிரான்சிஸ் மரியதாஸ் கைம்பெண் கார்மேல் அம்மா அவர்கள் தனது சீவிய உரித்துக்கு அமைவாக தமது இருபது வருடங்களுக்கு மேல் தடையற்ற ஆட்சியாகவுடையதெனவும் குறிப்பிட்டு பிரசித்த நொத்தாரிசு க.சிவலிங்கம் முகதாவில் 30.03.1993 ஆம் திகதியிட்டு 8797 ஆம் இலக்க சீதன உறுதி மூலம் தாயுறுதி குறிப்பிடப்படாது மகளான மருசலின் ஆல்டின் பெண் மேரிநொயிலினுக்கு சீதனமாக வழங்கியுள்ளார்.

ஆதன அட்டவணை: வட மாகாணம், யாழ்ப்பாணமாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, குருநகர் இறையில் முதலாம் குறுக்குத் தெருவில் யாழ்ப்பாண மாநகர சபை வரிமதிப்பு எண் 58 கொண்ட வீடும் வளவும் நிலப்பரப்பு அரையும் (1/2) அதற்குரியவைகளும்.

இதனெல்லை,

கிழக்கு:- முதலாம் குறுக்குத் தெரு.

வடக்கும் மேற்கும் :- பெஞ்சமின் சூரிக்கும் பெண் மேரிறேஸ்வுக்கும்.

தெற்கு :- பெனடிக்கும் பெண் பொன்னம்மாவுக்குரிய ஆதனம் இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

தற்போது இவ்வாதனத்தை மருசலின் ஆல்டின் பெண் மேரிநொயிலின் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார்.எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்துமூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது மருசலின் ஆல்டின் பெண் மேரிநொயிலின் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் இத்தால் தெரிவிக்கப்படுகிறது.

**முதல்வர்,மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(சி-5032)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1985 இந்து
நட்சத்திரம்: அத்தம் 1
கி.பா:14 1/2சூரி.செவ் 5 இல்
உயரம்:5'4"
தகைமை/ தொழில்: பலசரக்குகடை (சொந்தம்)
தொ.இ: B/6314

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 3
கி.பா:- செவ் 11 சூரி. 1 இல்
உயரம்:5'4"
தகைமை/ தொழில்:O/L (UK Not PR) கடை (தனியார்)
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ: B/6330

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அனுசம் 2
கி.பா:78 சூரி 1 செவ் 8 இல்
உயரம்:5'5"
தகைமை/தொழில்:A/L பாதுகாப்புஉத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு:அரச தொழில் உயரம் 5'
தொ.இ: B/6333

பிறப்பு:1984.ந்து
நட்சத்திரம்:கேட்டை
கி.பா: சூரி 6 செவ் 12 இல்
உயரம்:5'11"
தகைமை/ தொழில்: Bsc Cordenatar (தனியார்)
எதிர்பார்ப்பு:சாதாரண குடும்ப பெண்
தொ.இ: B/6353

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா:46சூரி6செவ் 8 இல்
உயரம்:5'10"
தகைமை/ தொழில்:BBAதனியார் தொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடு விரும்பத்தக்கது
தொ.இ:G/6027

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூசம் 3
கி.பா:-78 சூரி 1 செவ் 7 இல்
உயரம்:5'6"
தகைமை/தொழில்:A/L டிப்ளொக்
எதிர்பார்ப்பு:அரச தொழில் / வெளிநாடு
தொ.இ:G/6035

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்:திருகோணம்
கி.பா:58 ¼ சூரி1 செவ் 4
உயரம்:5'
தகைமை/ தொழில்: A/L/தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் (சுவிஸ்/கனடா)
G/6034

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூசம் 3
கி.பா:38 சூரி 5 செவ் 4
உயரம்:5'6"
தகைமை/தொழில்:Diploma in law
எதிர்பார்ப்பு:வெளிநாடு/ அரச தொழில்
தொ.இ:G/6071

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நாடுகளை மீண்டும் மிரட்டும் புதிய வைரஸ் கண்டுபிடிப்பு

(ஜெனிவா)

**உலக நாடுகளை அச்சுறுத்தும் கோஸ்டா-2 என்ற புதிய வைரஸ் தொற்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.**



கடந்த 2 ஆண்டுகளாக உலகை ஆட்டிப்படைத்த கொவிட் வைரஸ் பெருந் தொற்றையடுத்து கோஸ்டா-2 என்ற புதிய வைரஸ் மீண் டும் பரவ ஆரம்பித்துள்ளது.

ரஷ்ய வெளவால்களில் காணப்படும் இந்த வைரஸ் தற் போதுள்ள எந்தவொரு தடுப் பூசிக்கும் கட்டுப்படாது என்றும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

தற்போது கொவிட் வைரஸ் பெருந்தொற்று உலகளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பின் தலைவர் அறிவித்த நிலை யில், இந்த புதிய வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (நி)

## ரஷ்யாவுடன் இணைக்கப்பட்ட கெர்சான் பகுதியில் உக்ரைன் படையினர் முன்னேற்றம்

(கீவ்)

ரஷ்யாவுடன் அண்மை யில் உத்தியோகபூர்வமாக இணைக்கப்பட்ட, கெர்சான் பகுதியில் உக்ரைன் படையி னர் முன்னேற்றம் கண்டு வருவதாக அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.



உக்ரைனின் மிகக் கடுமை யான போர் முனைகளில் ஒன்றாக திகழும் தெற்கே அமைந்துள்ள கெர்சான் பிரா ந்தியத்தில் கெர்ஷெனிவ்கா பகுதியிலுள்ள திசைகாட்டி கம்பத்தில் உக்ரைன் தேசியக் கொடி பறக்கும் படங்கள் தற்போது வெளியாகியுள் ளன.

இதேவேளை, தெற்கு உக் ரைனில் ரஷ்யாவின் கட்டுப் பாட்டில் உள்ள ஒரு மூலோ பாய நகரமான கெர்சானின் வடகிழக்கே டினீப்பர் ஆற்றின் மீது உக்ரைனிய துருப்புக் கள், ரஷ்ய நிலைகளை தாக் கியுள்ளன.

இந்த முன்னேற்றம் ரஷ்ய இராணுவம் மற்றும் பிரா ந்தியத்தில் ரஷ்யாவால் நிறுவப்பட்ட அதிகாரிக ளால் உறுதிப்படுத்தப்பட்டுள் ளது.

இதனைத்தொடர்ந்து, கெர் சான் பகுதியில் உக்ரைன் படையினர் 'சற்று ஆழமாக' முன்னேறியுள்ளதாக அந்தப் பிராந்தியத்தில் ரஷ்ய அரசா ங்கத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரி கிரில் ஸ்ட்ரெமூ சோவ் ஒப்புக்கொண்டுள் ளார்.

எனினும், அந்தப் பகுதி யில் நிலைமை கட்டுக்குள் இருப்பதாகவும் பாதுகாப்பு இயந்திரங்கள் சரியான முறை யில் செயற்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

## ஜப்பான் மீது ஏவுகணை ஏவியது வடகொரியா

(பியாங்யாங்)

ஜப்பானின் வடக்குப் பகுதி யின் மீது வடகொரியா, பாலி ஸ்டிக் ஏவுகணையை ஏவிய தாக ஜப்பான் தெரிவித்துள் ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை ஜப்பானிய அரசாங்கத்திட மிருந்து வெளியான எச்சரி க்கையில், ஹொக்கைடோ தீவில் உள்ள மக்களுக்கு விமானம் மற்றும் ரயில் பயணங்களை தவிர்க்கு மாறும் அறிவுறுத்தப்பட்டது.

வடகிழக்கு ஹொக்கைடோ மற்றும் அமோரி பகுதிகளில் ரயில் சேவைகள் தற்காலி கமாக நிறுத்தப்பட்டன.

ஜப்பானில் இருந்து சுமார் 3,000 கி.மீ (1,860 மைல்) தொலைவில் உள்ள பசுபிக் பெருங்கடலில் ஏவுகணை விழுந்ததாகவும், இது தொடர் பாக எந்த பாதிப்பும் ஏற்பட வில்லை என ஜப்பானிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜப்பானிய கடலோரக்காவல் படை மற்றும் தென்கொரியா வின் கூட்டுப் படைத் தலைவர் களால் கண்டறியப்பட்ட ஏவு கணை 4,500 முதல் 4,600 கி.மீ (2,800-2,850 மைல் கள்) வரை அதிகபட்சமாக 1,000 கி.மீ (620 மைல்கள்) உயரத்திற்கு பறந்ததாக தெரிவித்தனர்.

எந்தவொரு முன் எச்சரிக் கையும் ஆலோசனையும் இன்றி மற்ற நாடுகளை நோக்கி ஏவுகணைகளை பறக்கவிடு வது சர்வதேச விதிமுறை களுக்கு முற்றிலும் முரணா னது.

கடந்த 2017ஆம் ஆண்டு க்குப் பிறகு ஜப்பான் மீது வடகொரியா ஏவுவது இதுவே முதல் முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## சுவீடன் நாட்டு விஞ்ஞானிக்கு மருத்துவத்திற்கான நோபல் பரிசு



(சுவீடன்)

2022 ஆம் ஆண்டு மரு த்துவத்திற்கான நோபல் பரிசு சுவீடன் நாட்டைச் சேர் ந்த ஸ்வான்டே பாடோவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அழிந்துபோன ஹோமி னின்களின் மரபணுக்கள் மற்றும் மனித பரிணாம வளர்ச்சியில் மரபணு குறி த்த ஆய்வுக்காக ஸ்வா ன்டே பாபோவுக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள் ளது. (நி)

## 7 ஆம் நூற்றாண்டுக்குரிய தங்க நாணயங்கள் இஸ்ரேலில் கண்டுபிடிப்பு



(காபூல்)

இஸ்ரேலில் 7ஆம் நூற் றாண்டுக்குரிய 44 தங்க நாணயங்கள் கண்டுபிடி க்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு தொல்பொருள் ஆராய்ச் சியாளர்கள் தெரிவித்துள்ள னர்.

கிணறொன்றுக்குள் இரு ந்து இவை கண்டுபிடிக்க ப்பட்டுள்ளன.


170 கிராம் நிறையுடைய தங்க நாணயங்களே இவ் வாறு மீட்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ள னர். (நி)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# கீழ்க்காய் நெல்லி

**Botanical Name- Phyllanthus niruri**
**Family- Euphorbiaceae**







டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

ஒரு பருவ குறுஞ்செடி. மழைகாலத்தில் தாராளமாக பரம்பிக் காணப்படும். செங்குத்தாக வளரக்கூடியது. இலைகள் நீள்வட்டம் அல்லது கோள வடிவாக இருக்கும். யாழ். மாவட்டத்தில் வளமில்லாத நிலங்களில் பரம்பிக் காணப்படும். இலை ஓரங்கள் பற்கள் போன்ற அமைப்பு உடையவை. விதைகள் மூலமும் மொட்டு ஒட்டு மூலமும் இனவிருத்தி செய்யலாம்.

வாரத்திற்கு இருமுறை இதன் இலைகள் சிறிதளவு எடுத்து பாலோடு சேர்த்தோ அல்லது நீரிலோ கொடுத்து வர குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்றுமந்தம், கல்லீரல், மண்ணீரல் வீக்கத்தை தணிக்கும்.

கீழ்க்கால் நெல்லி செடியை பிடிங்கி கழுவி அரைத்து உடம்பில் தேய்த்து குளித்து வர உடம்பில் ஏற்படும் அரிப்பு, சிறுபுண்கள் நீங்கிவிடும்.

கீழ்க்காய்நெல்லி இலைகளையும், மஞ்சள், கரிசலாங்கண்ணி இலையையும் சம அளவு எடுத்து நன்றாக அரைத்து 5 கிராம் அளவு (கொட்டைப்பாக்களவு) காலை, மாலை ஆட்டுப்பாலிலோ, பசுப்பாலிலோ கலந்து பருகவும் இவ்வாறு.5-7 நாட்கள் அருந்தி பாற்சோறு மட்டும் சாப்பிட்டு வந்தால் மஞ்சட்காமாலை குணமாகும்.

அல்லது கீழ்க்காய் நெல்லிச்செடி வேருடன் 4, ஒரு வெங்காயம், சீரகம் சிறிதளவு என்பவற்றை பசும்பாலில் அரைத்து காலை, மாலை இரு வேளையாக 5 நாட்கள் கொடுக்க வேண்டும் உப்பைத் தவிர்க்க வேண்டும்.

கீழ்க்காய் நெல்லி, கரிசலாங்கண்ணி, பேய்ப்புடோல், வெண்மிளகு, சோம்பு (பெருஞ்சீரகம்), வில்வ வேர் ஒவ்வொன்றும் 8 கிராம் எடுக்கவும். 500 மில்லி நீரில் காய்ச்சி 100 மில்லியாக வரும்படி வற்ற வைத்து தினமும் 5 நாட்கள் அருந்தி வர மஞ்சட்காமாலையுடன் இரத்தச் சோகையையும் தீரும். கீழ்க்காய் நெல்லிச்செடிகளை வேருடன் சேகரித்து நன்கு கழுவி நிழலில் உலர்த்தி பொடித்து 2 கிராம் அளவு காலை, மாலை பாலில் சாப்பிட்டு வர இரத்தக்குறைவு நீங்கும். ஈமோகுளோபினின் அளவையும் கூட்டும்.

இலையையும் வேரையும் குடிநீரிட்டு சூட்டோடு 30 மில்லி வீதம் காலை, மாலை கொடுத்து வர காய்ச்சல் தணியும். இக்குடிநீரையே ஆறிய பின்பு குடித்து வர உடல் வலுக்கும். பசியைத் தூண்டும் சிறுநீர் நன்கு வெளிப்படும்.

தேக அரிப்பு நீங்க கீழ்க்காய் நெல்லி இலைகளை மட்டும் ஆய்ந்து எடுத்து அம்மியில் வைத்து சிறிதாக உப்புச் சேர்த்து மைபோல இல்லாமல் சிறிது சொரசொரப்பாக அரைத்து உடலில் பூசி வைத்து 15 நிமிடங்கள் ஊறிய பின் வெந்நீரில் குளிக்க வேண்டும். இந்த விதமாக 3 நாட்கள் தொடர்ந்து செய்து வர தேக அரிப்பு நீங்கும்.

கீழ்க்காய்நெல்லி இலையின் சாறு 300 மில்லியோடு நாம் தலைக்கு தேய்க்கும் வழக்கமான எண்ணெய் 600 மில்லி சேர்த்து காய்ச்சி நீர் சுண்டியதும் வார்த்து வைத்துக் கொண்டு குளிப்பதற்கும், தலைக்கு தேய்ப்பதற்கும் பயன்படுத்தலாம். இதனால் உடல் உஷ்ணம் தணிந்து பித்தம் சம்பந்தமான நோய்கள் நீங்கும்.

அதன் இலைகளை தனியாக பறித்து அரைத்து ஒரு பாக்களவு (5கிராம்) மோரில் கலக்கி காலையில் ஒரு வேளை 7 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வர பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை சாய்தல் நீங்கும்.

பெரும்பாடு நீங்க கீழ்க்காய் நெல்லி வேர் 20 கிராம், நாவல் பட்டை 20 கிராம், அத்திப்பட்டை 20 கிராம் இம் மூன்றையும் மை போல அரைத்து 350 மில்லி புளித்த மோரில் கலந்து அத்துடன் புதிதான அரைத்தெடுத்த சந்தனம் 5 கிராம் போட்டு கலக்கி தினமும் காலையில் பருகி வர குணமாகும். நோய் நீங்கும் வரை சாப்பிட வேண்டும். தேக பலத்திற்கு கீழ்க்காய் நெல்லிச் செடியை நிழலில் உலர்த்தி இடித்து சூரணித்து வைத்துக் கொள்ளவும். இத்துடன் தேற்றான் கொட்டை 70 கிராம் எடுத்து பசும்பாலில் வேகவைத்து கழுவி உலர்த்தி கல்லீரலில் போட்டு சூரணமாக இடித்து வைத்துக் கொள்ளவும். கீழ்க்காய்நெல்லி சூரணம் 2 தேக்கரண்டி வீதமும் தேற்றான் கொட்டை சூரணம் அரைத் தேக்கரண்டி வீதமும் எடுத்து 350 மில்லி தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து கால் பாகமாக வற்ற வைத்து வடிகட்டி 175 மில்லி காய்ச்சிய பசும்பாலில் கலக்கி சிறிது சீனியும் சேர்த்து தினமும் காலையில் அருந்தி வர தேக பலம் உண்டாகும். சருமமும் மினுமினுப்பாக இருக்கும்.

காமாலை நோயிற்கும் இரத்தக்குறைவு நோயிற்கும் முக்கியமான மூலிகையாகும். இனி வரப்போகும் மழைக்காலங்களில் இதன் பரம்பல் அதிகமாகக் காணப்படும். எனவே கூடுதலாக பரம்பல் இருக்கும் போது இச் செடிகளை வேருடன் சேகரித்து நன்கு கழுவி நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து வைத்து கொண்டு தேவையான போது பயன்படுத்தலாம்.

# மனைத்தோட்டமும் மனைப்பொருளாதாரமும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

(சென்ற வார தொடர்ச்சி)

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

மனைத்தோட்டத்தில் இயற்கையாக வளரக்கூடிய பலவகையான தாவரங்கள், விலங்கு வளர்ப்பு, இறால் வளர்ப்பு எனப் பலவற்றை ஒன்றிணைத்து மேற்கொள்ள வாய்ப்புக்கள் அதிகம். தேவையான பல்வகைத்தன்மையுடைய பயிர்களை ஊட்டச்சத்து நிறைந்த உணவுப் பொருளாக மதிப்பேற்றஞ் செய்து அவற்றை விற்பனைக்காக உள்ளூரிலேயே நியாயமான விலையில் சந்தைப்படுத்தல் நன்று.

மனைப்பொருளாதாரத்தின் ஆரம்பமே உற்பத்தியை அதிகரித்து தமது தேவைகளைத் தவிர்த்து மேலதிகமானதை விற்று அதன் மூலம் மனைப் பொருளாதாரம் மீளழவழி வகுக்கும்.

மனைத்தோட்டத்தில் காய்கறிப்பயிர்கள், பழப்பயிர்கள், மருத்துவ மூலிகைகள் அனைத்தையும் பயிரிட்டு அதிலிருந்து பெறும் உற்பத்தியை மனையின் பொருளாதார மேம்பாட்டுக்கு பயன்படுத்தலாம்.

அன்றாடம் வெளிவரும் கழிவுகளையும் மீள்சுழற்சி செய்து அவற்றை சிறந்த பசளையாக மாற்றிவிடும் பொறிமுறையை அனைவரும் இலகுவில் கையாளலாம். பலவுயிர்களை மற்றும் தாவரங்களை உள்ளடக்கும் மனைத்தோட்டத்தை உணவுப் பாதுகாப்பின் முதற் செயலி என வரையறுக்கலாம். அனைவருக்குமான உணவு இங்கே கிடைக்கின்றது. அனைவரும் சேர்ந்து தமக்கான நஞ்சற்ற புதிய வகைகளை அறுவடை செய்து உண்ணுகின்ற நிலைக்குள் உள்ளார்ந்திருப்பது ஆரோக்கியமான செயற்பாடாகக் கருதலாம்.

ஊட்டச்சத்தான உணவை உண்ணுகின்ற நிலைக்குள் மனைத்தோட்டம் வழிவகுக்கும் என்பதுடன் வளமான எதிர்கால சந்ததியை உருவாக்குவதற்கு இது உதவும். உணவுற்பத்தி என்பதற்கு முன்னுரிமையளிக்காது மனைத்தோட்டத்தை வெறுமனே அழகுத் தாவர உற்பத்திக்கான தளமாக வைத்திருப்பது பொருத்தமானதல்ல.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...




பயிருற்பத்தியை முன்னிலைப்படுத்தி அதனுடன் கோழி வளர்ப்பு மற்றும் கால்நடை வளர்ப்பு என்பனவற்றையும் இணைத்துக்கொள்ளும் போது மனைப் பொருளாதாரத்தினை அதிகரிக்கும் வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம்.

தீவனத்தின் அதிகரித்த விலைகளையும் தாண்டி உள்ளூரில் கிடைக்கும் பொருட்களையும் கழிவுகளையும் பயன்படுத்தி தீவன உற்பத்தியை அதிகரித்தல் வேண்டும். அதற்கான தொழில் நுட்பங்களை முறையாக பயன்படுத்தினால் இந்த இடரிலிருந்து தப்பிக்கலாம். மனைப் பொருளாதாரத்தில் நிதி முகாமைத்துவம் மிக வும் வினைத்திறனாக மேற்கொள்ளப்படுவதனாலும் உணவுற்பத்தி முன்னிலைப்படுத்தப்படுவதனாலும் அவற்றில் உணவுப்பஞ்சம் ஏற்பட வாய்ப்புக்களில்லை. ஆனால் ஊட்டச்சத்து குறைபாடு ஏற்படாது. அதற்கேற்றவாறு பயிர்களின் பல்வகைத் தன்மை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

மனையிலுள்ள உறுப்பினர்களின் முழுமையான பங்களிப்புடன் மனைத்தோட்டம் உருவாக்கப்படுவது அனைவருக்குமான தேவையான குறைந்தளவு உணவை பெற வழி வகுக்கும்.

இதனையே நாம் தற்போது மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்திலிருக்கின்றோம். முயற்சி செய்தால் இந்தப் பொருளாதார பேரிடரிலிருந்து விடுபடுவதற்கு வாய்ப்புக்களதிகம்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் அட்டை பண்ணைக்கு எதிராக
## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு



(மன்னார்)

பாதிக்கப்பட்ட பூநகரி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராஞ்சி சிவபுர மீனவர்கள் நேற்று காலை இலங்கை மனித உரிமை ஆணைக்குழு யாழ்.பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த பல நாட்களாக சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட கடல் அட்டை பண்ணைகளால் சிறு மீன்பிடி கரையோர தொழிலாளர்கள் தமது பாரம்பரிய மீன்பிடித் தொழிலை தொடர்ந்து முன்னெடுக்க முடியாது இருப்பதாக தெரிவித்து கடந்த 4 நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மீனவர்கள் சிலர் நேற்று யாழ். மாவட்ட பிராந்திய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் காரியாலயத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளனர்.

தொடர்ச்சியாக போராட்டத்தை மேற்கொண்டு வருகின்ற நிலையில் அதிகாரிகள் எவரும் தமது இடத்திற்கு வந்து உரிய தீர்வை பெற்றுத்தர முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்கள் கவலை தெரிவித்துள்ளனர். (4-285)

# அரசியல் தீர்வைக் கோரி மன்னாரில் போராட்டம்



(மன்னார்)

வடக்கு - கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை கோரும் பயணத்தில் 65 ஆவது நாள் கவனயீர்ப்பு நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்டம் மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள குஞ்சுக்குளம் கிராமத்தில் இடம்பெற்றது.

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற கவனயீர்ப்புப் போராட்டத்தில் மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணியாளர் கலந்து கொண்ட தோடு, குஞ்சுக்குளம், பெரிய முறிப்பு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கிராம மக்கள்,பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், இளைஞர்கள், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (4-285)

# சட்டவிரோத பொருட்களுடன் வவுனியாவில் ஒருவர் கைது

(நெளுக்குளம்)

வவுனியா ஈரட்டை பகுதியில் சட்டவிரோதமான முறையில் பொருட்களை கொண்டு சென்ற குற்றச்சாட்டில் நேற் றைய தினம் ஈரற்பெரியகுளம் பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து யாழ்ப்பாணத்திலிருந்து வத்தளைக்கு பயணம் செய்த கூலர் ரக ஹன்டர் வாகனத்தை நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் ஈரட்டை பகு தியில் வழிமறித்து சோதனை மேற்கொண்ட பொலிஸார் குறித்த வாகனத்தில் இருந்து 3800 கிலோ மஞ்சள் மற்றும் 250 மில்லி லீற்றர் விவசாய கிருமிநாசினி மருந்து போத்தல் 519 என்பவற்றை சட்ட விரோதமாக கொண்டு சென்ற குற்றச்சாட்டில் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த பொருட்களை கொண்டு சென்ற நீர் கொழும்பைச் சேர்ந்த 43 வயது நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.(4-299)

# வன்னேரிக்குளத்தின் கீழான காலபோக நெற்செய்கை தொடர்பான கலந்துரையாடல்



(கருமபுரம்)

கிளிநொச்சி வன்னேரிக்குளத்தின் கீழான 2022 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கை அளவை தீர்மானிக்கும் கலந்துரையாடல் வன்னேரிக்குளம் பொது நோக்கு மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது, வன்னேரிக்குளத்தின் கீழ் 363 ஏக்கரில் காலபோக செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதுடன் ஒரு ஹெக்டேயருக்கு முதல் 35 கிலோ யூரியா உரம் வழங்கப்படவுள்ளதாகவும் இது மூன்று கட்டமாக வழங்கப்படவுள்ளதாகவும் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன்,கரைச்சி பிரதேச செயலாளர், கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர், கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதி ஆணையாளர், விவசாய திணைக்கள மாவட்ட பிரதிப்பணிப்பாளர்கள், மாவட்ட கமநல காப்புறுதிச்சபை உதவிப்பணிப்பாளர், குறித்த குளத்தின் கீழுள்ள கமக்காரர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (4-316)

# பிரித்தானியத் தூதுவர் மன்னாரிற்கு விஜயம்



(மன்னார்)

இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் சரா ஹல்ரன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை மன்னார் மாவட்ட செயலகத்திற்கு விஜயம் செய்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. அ.ஸ்ரான்லி டிமேலுடன் விசேட கலந்துரையாடலை மேற்கொண்டார்.

குறித்த கலந்துரையாடலின் போது மன்னார் மாவட்ட நில வரம் தொடர்பாக அரசாங்க அதிபரினால் விளக்கமளிக்கப்பட்டதுடன் அரசாங்கத்தினால் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்திப் பணிகள் மாவட்ட மக்களுக்கு தேவைப்பாடாக உள்ள விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

தூதுவரை கௌரவிக்கும் முகமாக மாவட்ட அரசாங்க அதிபரினால் நினைவுப் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (4-285)



யாழ்ப்பாணம் வண்ணை வெங்கடேஸ்வர பெருமாள் ஆலய வருடாந்திர மகோற்சவ தேர்த் திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது.


(படம்-சிவசாந்தன், ரவிசாந், கஜிந்தன்)

# அடிப்படை வசதிகளை கோரி நாச்சிக்குடா மக்கள் போராட்டம்

(கருமபுரம்)

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நாச்சிக்குடா மக்கள் தமக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறு கோரி நேற்று முன்தினம் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

நாச்சிக்குடா பள்ளிவாசல் முன்பாக ஒன்று கூடிய மக்கள் பேரணியாக பதாகைகளை ஏந்தியவாறு ஏ32 வீதி நாச்சிக்குடா சந்திவரை சென்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஜனாதிபதியே எம்மை



திரும்பிப் பாருங்கள், மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களுக்கு எம்மை அழைக்காதது ஏன்,எமது உரிமைகளை எமக்கு தா, எமக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தாருங்கள் போன்ற பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

100 இற்கு மேற்பட்டோர் குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். (4-316)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.

## 01.01.2023 முதல் 31.12.2023 வரை மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடைகள் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் - 2023

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 07.10.2022 – 21.10.2022
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :- 22.10.2022 மு.ப 10.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 22.10.2022 மு.ப 10.30 மணி

| இல. | கேள்வி கோரப்படும் இடங்கள் | கேள்வித் தொகை (VAT, NBT தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீள் அளிக்கக்கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| கச்சாய் உப அலுவலகம் | | | | |
| 1 | கொடிகாமம் மத்திய மரக்கறிச்சந்தை, வண்டி வாகன தரிப்பு நிலையம். | 13,197,450.00 | 132,000.00 | 750.00 |
| 2 | கொடிகாமம் மீன் சந்தை | 1,525,900.00 | 15,300.00 | 750.00 |
| 3 | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 889,500.00 | 8,900.00 | 750.00 |
| 4 | கொடிகாமம் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1,253,700.00 | 12,600.00 | 750.00 |
| 5 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல 01 | 116,050.00 | 1,200.00 | 750.00 |
| 6 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல 02 | 96,400.00 | 1,000.00 | 750.00 |
| 7 | களஞ்சிய அறை இல – 01 | 29,150.00 | 500.00 | 750.00 |
| 8 | களஞ்சிய அறை இல – 02 | 27,500.00 | 500.00 | 750.00 |
| 9 | கொடிகாமம் மத்திய பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகாமையிலுள்ள மலசலகூடம் | 15,650.00 | 500.00 | 750.00 |
| 10 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் – 01 | 19,050.00 | 500.00 | 750.00 |
| 11 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் – 02 | 21,800.00 | 500.00 | 750.00 |
| 12 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் - 03 | 23,250.00 | 500.00 | 750.00 |
| வரணி உப அலுவலகம் | | | | |
| 13 | வரணி பொதுச்சந்தை | 67,000.00 | 700.00 | 750.00 |
| 14 | வரணி இயற்றாலை பொதுச்சந்தை | 28,100.00 | 500.00 | 750.00 |
| கைதடி உப அலுவலகம் | | | | |
| 15 | கைதடி மாட்டிறைச்சிக்கடை | 225,500.00 | 2,300.00 | 750.00 |
| 16 | கைதடி கோழி இறைச்சிக்கடை | 263,250.00 | 2,700.00 | 750.00 |
| 17 | கைதடி பொதுச்சந்தை | 78,100.00 | 800.00 | 750.00 |
| மிருசுவில் உப அலுவலகம் | | | | |
| 18 | மிருசுவில் மாட்டிறைச்சிக்கடை | 346,500.00 | 3,500.00 | 750.00 |
| 19 | மிருசுவில் கோழி இறைச்சிக்கடை | 80,650.00 | 900.00 | 750.00 |
| 20 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக்கடை | 42,500.00 | 500.00 | 750.00 |
| 21 | மிருசுவில் பொதுச்சந்தை | 5,650.00 | 500.00 | 750.00 |
| 22 | மிருசுவில் வடக்கு பொதுச்சந்தை | 31,050.00 | 500.00 | 750.00 |
| 23 | எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | 16,850.00 | 500.00 | 750.00 |
| நாவற்குழி உப அலுவலகம் | | | | |
| 24 | நாவற்குழி பொதுச்சந்தை | 33,000.00 | 500.00 | 750.00 |

## நிபந்தனைகள்

1. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் 07.10.2022 தொடக்கம் 21.10.2022 வரையான காலப்பகுதிக்குள் கேள்விப் படிவத்தினை சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணிமனையில் பெற்றுக்கொண்டு குறித்தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீள ஒப்படைக்க வேண்டும்.
2. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம், அதன் நிழற்படப்பிரதியினையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. கேள்வித் தொகை, படிவக் கட்டணம் என்பவற்றை செலுத்துதல் வேண்டும். (வரி நீங்கலாக)
4. 22.10.2022 ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி சமர்ப்பித்தவர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்கலாம்.
5. இறைச்சிக் கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாதவாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
6. கால்நடைகள் சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சி கொண்டு வரப்படல் வேண்டும். அத்துடன் சபையினால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளிற்கு கட்டுப்படுதல் வேண்டும்.
7. குத்தகைதாரரினால் குத்தகைக்கு எடுத்து நடாத்தும் சந்தைக்கான அறவீடுகளிற்கு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படல் வேண்டும்.
8. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் ஒரு வார காலத்துள் 1/3 பகுதியை முற்பணமாக செலுத்த வேண்டும். மிகுதித் தொகையினை 1/8 பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு மாதக் கட்டணமாக அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.
9. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு ஒரு பிரதியினை "தவிசாளர்/செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்" என்ற விலாசத்திற்கும் மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
10. உள்ளூராட்சி மன்றங்களில் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
11. கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.
12. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

தவிசாளர்,
பிரதேச சபை,
சாவகச்சேரி.

(F-5029)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## முகநூல் தரிசனம் 102

# பணத்தை நேசிப்பதை விட மனித நேயமுள்ளவரை நேசியுங்கள்

உலகப் புகழ் பெற்ற ஆடை வடிவமைப்பாளர் கிறிஸ்டாரோட்ரிக்ஸ் இவர் சமீபத்தில் கான்சர் நோயினால் இறந்து போனார். அவர் இறக்கும் முன் கடைசியாக எழுதிய வார்த்தைகள்..

மரணத்தை விட உண்மையானது இந்த உலகத்தில் எதுவுமே இல்லை! இந்த உலகத்தில் விலை உயர்ந்த பிராண்டட் கார் என்னுடைய கராஜ்ஜில் நிற்கிறது. ஆனால் நான் சக்கர நாற்காலியில் அழைத்துச் செல்லப்படுகிறேன். இந்த உலகத்தில் உள்ள அனைத்து வகையான டிசைன்களிலும் கலர்களிலும் விலை உயர்ந்த ஆடைகள், காலணிகள் போன்ற பொருட்கள் அனைத்தும் என் வீட்டில் உள்ளன. ஆனால் நான் மருத்துவமனை வழங்கிய சிறிய உடையில் இருக்கிறேன். என் வங்கிக் கணக்கில் ஏராளமான பணம் கிடக்கிறது. ஆனால் எதுவும் எனக்குப் பயன் இல்லை.

என் வீடு அரண்மனை, கோட்டை போன்றது. ஆனால் நான் மருத்துவமனையில் ஒரு சிறு படுக்கையில் கிடக்கிறேன். இந்த உலகத்தில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல்களுக்கு நான் பயணித்துக் கொண்டே இருந்தேன். ஆனால் மருத்துவமனையில் உள்ள ஆய்வகங்களுக்கு மற்றொரு லாபிற்கும் மாற்றி மாற்றி அழைத்துச் செல்லப்படுகிறேன். அன்று தினசரி 7 சிகை அலங்கார நிபுணர்கள் எனக்கு அலங்காரம் செய்வார்கள். ஆனால் இன்று என் தலையில் முடியே இல்லை... உலகிலுள்ள பல வகையான உயர் நட்சத்திர ஹோட்டல் உணவுகளை உண்டு கொண்டிருந்தேன். ஆனால் இன்று பகலில் இரண்டு மாத்திரைகள் இரவில் ஒரு துளி உப்பு. தனியார் ஜெட்டில் உலகம் முழுவதும் பறந்து கொண்டிருந்தேன். ஆனால் இன்று மருத்துவமனை வராண்டாவிற்கு வருவதற்கு இரண்டு நபர்கள் உதவுகிறார்கள்... எல்லா வசதி வாய்ப்புக்களும் இருந்தும் எனக்கு உதவவில்லை... எந்த விதத்திலும் ஆறுதல் தரவில்லை... ஆனால் சில அன்பானவர்களின் முகங்களும் அவர்களது தொழுதல்களும் என்னை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. பிறக்கும் போது நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை. போகும் போது இதில் இருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம்..



அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.




## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ். பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

## ஏன் வாசிப்பு பழக்கம் அவசியம்

வாசிப்பு ஒரு மனிதனை பூரணமானவனாக மாற்றுகிறது. வாசிப்பு பழக்கம் இருந்தால் ஒரு சிந்தனை அறிவு பிறக்கும். ஒரு கருத்து உயிர் விட ஆரம்பிக்கும். அம்பேத்காரின் வாசிப்பு பழக்கம் தான் இந்திய தேசத்திற்கு சட்டப் புத்தக்கத்தை கொடுத்தது. பாரதியின் வாசிப்பு பழக்கம் தான் சுதந்திர தாகத்தை உண்டு பண்ணியது. அரிஸ்ரோட்டலின் சீடன் வாசிப்பு பழக்கத்தால் தான் பிளேட்டோ ஆனான்.

விவேகானந்தரின் ஒரு உரை, கம்பனின் ஒரு செய்யுள், கண்ணதாசனின் ஒரு வரி, பாரதியின் ஒரு பாட்டு, பாரதிதாசனின் ஒரு சிந்தனை, சுஜாதாவின் சிறுகதை வாசிப்பை தூண்ட காரணமாயிற்று.

என்னிடம் இருந்த வாசிப்பு பழக்கம் தான் என்னை உலகிற்கு அடையாளப்படுத்தியது என்று அறிஞர் அம்பேத்கர் சொல்லியிருக்கிறார். தாழ்ந்த சமூகத்தில் பிறந்த குடிமகனை சட்டப் புத்தகம் வரையும் வரை உயர்த்தியது வாசிப்பு பழக்கம் தான்.

இராமேஸ்வரத்தில் ஒரு ஏழைச் சிறுவன் ரொம்ப வறுமையான சூழல். இஸ்லாமிய சமூகம் பேப்பர் போட்டு குடும்பம் நடத்தியவர். பின்னாளில் இந்தியாவின் தலை சிறந்த விஞ்ஞானி ஆகிறார். இந்தியாவில் முதல் குடிமகன் ஆகிறார். அவர் தான் அப்துல்கலாம். அவர் இத்தனை உயரம் போகக் காரணமாய் இருந்தது வாசிப்புத் தான்.

எல்லோருக்கும் தெரியும் கவிஞர் வாலி அவர்களை, மூன்று தலைமுறை



களாக தமிழ் திரை உலகை தன் பாடல் வரிகளால் ஆக்கிரமித்தவர். திரைத் துறைக்கு வந்த காலத்தில் வாய்ப்புத் தேடி அலைந்த போது பெரும்பாலானா வாய்ப்புக்கள் நிராகரிப்புக்களால் ஊருக்கு புறப்பட்டு போய் விடலாம் என்று சிந்தித்த போது கண்ண தாசனின் ஒரு வரியைக் கேட்கிறார். "மயக்கமா கலக்கமா" என்ற பாடல். அந்தப் பாடல் தான் அவரை மூன்று தலை முறையாக தமிழ்த் திரைத் துறையை ஆட்சி செய்ய வைத்தது.

புத்தகம் மிகப் பெரிய ஆயுதம். ஏன் என்றால் அது அறிவார்ந்த கருத்துக்களை சுமந்து வருகிறது. உலகின் மிகப் பெரிய தலைவர் எல்லாம் புத்தகங்கள் ஊடாக உருவாக்கப்பட்டவர்கள். ஒரு சின்ன சம்பவம் நினைவுக்கு வருகிறது. அயர்லாந்தில் ஒரு யுத்தம் நடக்கிறது. அந்த யுத்தத்தில் அயர்லாந்து தேசத்து மன்னன் தோற்கடிக்கப்படுகிறான். எதிரியிடம் மாட்டுப்பட்டால் கொன்று விடுவார்கள். தப்பித்து ஓட வேண்டும், அவனிடம் எதுவுமே இல்லை. அவனுடைய தளபதியிடம் சொல்லி ஒரு புத்தகத்தை எடுத்து கொண்டு தப்பித்துச் செல்கிறான். அந்தப் புத்தகத்தை தனிமையில் வாசிக்கிறான். அந்தப் புத்தகம் அவன் மனதில் பதியும் வரை படிக்கிறான். அதன் பிறகு அவனுடைய தளபதிக்கு படை திரட்ட அழைப்பு விடுகிறான். யுத்தம் நடக்கிறது போரில் வெல்கிறான். நாட்டை மீட்கிறான். அதன் பின் மக்கள் முன்னால் உரையாற்றும் போது கூறுகிறான். இந்த வெற்றிக்கு இந்தப் படைகள் மட்டும் காரணம் இல்லை. இதோ இந்த புத்தகமும் காரணம் என்கிறான். அந்தப் புத்தகம் தான் மாக்கியாவல்லி எழுதிய இளவரன்.

இப்படி எத்தனை யோ தலைவர்களை வாசிப்பு பழக்கம் உயரத்துக்கு கொண்டு சென்றுள்ளது. புத்தகங்களை வாசியுங்கள் அறிவுள்ள சமுதாயத்தை உருவாக்குங்கள்.

# சிலப்பதிகாரம்

## மிரண்டான் வாயிற்காவலன்

அரசே வாசலில் ஒரு பெண் வந்திருக்கிறாள். வேலைக் கையில் பிடித்த கொற்றவை இல்லை. இறைவனை நடனமாடச் செய்த பத்ரகாளி இல்லை. பார்க்கப் பயம் தரும் காளி இல்லை. தாருகனின் மார்பை பிளந்த துர்க்கை இல்லை. ஆனால் இவர்கள் அத்தனை பேரையும் நினைவுக்குக் கொண்டுவரும் அளவுக்குக் கோபம் கொண்ட நெஞ்சமும் சினம் கொப்பளிக்கும் கண்களும் கொண்டவளாக இருக்கிறாள். கணவனை இழந்தவள் கையில் ஒற்றைச் சிலம்பு ஏந்தியள் என்றான்.




ஒரு நாட்டின் பிரஜைகளும் அரசாங்க ஊழியர்களும் அரசனைதான் ஆயிரம் வர்ணனைகளோடு குறிப்பிடுவார்கள். அரசனிடமே வேறொருவரை வர்ணிப்பதில்லை. அப்படிக் குறிப்பிட்டால் அரசனின் கோபத்துக்கு ஆளாக நேரிடும் என்கிற பயம் எல்லோருக்கும் இருக்கும்.

அந்த பயத்தைக் காணாமல் அடிக்கிற அளவுக்கு, அதைவிடப் பெரிய பயத்தை ஒரு பெண்ணின் தோற்றம் தந்திருக்கிறது என்பதைப் பாண்டியன் புரிந்துகொண்டான். அதனால் வாயிற்காவலன்மேல் அவனுக்குக் கோபம் வரவில்லை.

மேலும், ஒற்றைச் சிலம்பு, கணவனை இழந்தவள் என்கிற குறிப்புக்கள் அவனுக்குப் புரியாதா என்ன? 'வரச் சொல் அந்தப் பெண்ணை' என்றான்.

புயல் காற்று மாதிரி உள்ளே பிரவேசித்தாள் கண்ணகி.

'இளங் கொடி போன்ற பெண்ணே, நீ யார்? உன் கண்ணீருக்குக் காரணம் என்ன?' என்று கேட்டான் பாண்டியன்.

கண்ணகி ஆரம்பித்த விதமே அவையில் இருந்தவர்களை அரண்டு போகச் செய்தது.

### சிலம்பினுள்ளே...

அமிலத் துளிகளாக வெளிவந்தன அவள் வார்த்தைகள்.

"ஆராயத் தெரியாத மன்னனே, நான் சொல்வதைக் கேள்!"

"தேவர்களே ஆச்சரியப்படும்படி ஒரு புறாவின் துயரத்தைப் போக்கிய சிபி, கன்றை இழந்த பசுவுக்கு நீதியாகத் தன் சொந்த மகனையே தேர்ச் சக்கரத்துக்குப் பலியாக்கிய மனுநீதிச் சோழன் போன்ற செங்கோல் வழுவாத மன்னர்கள் ஆண்ட புகார் நகரம் என்னுடையது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறு செய்ததைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்; இரண்டாவது தடவையும் அதே தவறைச் செய்யா திருத்தல் பற்றியே கவலைப்பட வேண்டும்.

*– அலன் தார்ன்ஹில்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விஜயதசமியின் மகிமை உணர்ந்து கொள்ளோமோ!

இன்று விஜயதசமி. நவராத்திரி விரதம் நிறைவுற்று பத்தாவது நாள் விஜயதசமி ஆகும்.

ஏடு தொடக்குதல், கலைப்பயிலரங்குகளை ஆரம்பித்தல் உள்ளிட்ட நாள் வேலைகள் இன்றைய தினம் ஆரம்பிக்கப்படும்.

தவிர, விஜயதசமியன்று ஆயுதபூஜை இடம்பெறுகின்ற வழமையும் உண்டு.

குருசேத்திரப் போருக்குச் செல்வதற்கு முன்னதாகப் பாண்டவர்கள் வன்னி மரத்தடியில் தாம் புதைத்து வைத்த ஆயுதங்களை எடுத்து ஆயுதபூஜை நடத்திய நாள் இன்று என்பதால், இது ஆயுத பூஜை இடம்பெறுகின்ற நாளாயிற்று.

விஜயதசமி அன்று அவரவர் தத்தம் தொழில் துறை சார் ஆயுதங்கள் மற்றும் கருவிகளை வைத்துப் பூசை செய்து வழிபடுகின்ற நாளாக விஜயதசமித் திருநாள் அமைகிறது.

அதிலும் குறிப்பாக நவராத்திரி விரதமும் விஜயதசமியும் எங்கள் பாடசாலைகளில் மிகச்சிறப்பாக அனுஷ்டிக்கின்ற நடைமுறை உளது. இதற்குப் பல காரணங்கள் உண்டு.

அதாவது மாணவர்கள் தனித்து பாடப் புத்தகப் படிப்போடு மட்டும் நின்றுவிடாமல் இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழிலும் பாண்டித்தியம் பெற்றவர்களாக விளங்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில் மாணவர்களின் கலைத்திறனை வெளிப்படுத்துகின்ற ஒரு களமாக நவராத்திரியும் விஜயதசமியும் அமைகின்றது.

எனினும் சமகாலத்தில் பாடசலைகளில் இடம்பெறுகின்ற நவராத்திரி மற்றும் விஜயதசமி பூசை வழிபாடுகள் ஒரு சம்பிரதாயச் சடங்குபோல ஒவ்வொரு நாளுக்கு ஒவ்வொரு வகுப்பு மாணவர்கள் பங்கேற்பதாக நிலைமை ஆகிவிட்டது.

இதனால் ஆன்மிக சிந்தனை மாணவர்களிடையே ஏற்படுத்தப்படவில்லை என்றபோது அவர்கள் பிறழ்வான பாதையில் பயணிப்பது சுலபமாயிற்று.

உண்மை. இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த சுவாமி விவேகானந்தர் இங்கு உரையாற்றியபோது, ஆன்மிக தானம் செய்ய வேண்டும் என்றார்.

இந்த அடிப்படையில்தான் பாடசாலைகளில் இடம்பெறும் காலைப் பிரார்த்தனைகளும் வெள்ளிக்கிழமை தோறும் சிவபுராணத்தைக் கூட்டாகப் பாடுதலும், அதன் நிறைவில் ஆசிரியர்களின் நற்சிந்தனைகளும் என எல்லாமும் சேர்ந்து மாணவர்களை ஆன்மிக வழியில் பக்குவப்படுத்தின.

ஆனால் இன்று நிலைமை அதுவல்ல. பரீட்சைப் பெறுபேறுகள் மட்டுமே கருத்தில் எடுக்கப்படுகின்றன.

பேச்சாற்றல், எழுத்தாற்றல், கவித்துவம், நடிப்பு, இசை என்ற ஆளுமைகளுக்கு இடம் வழங்கப்படுவதில்லை அல்லது அதற்கான சந்தர்ப்பம் மிக அரிது எனலாம்.

தவிர, நடக்கின்ற இணைப்பாட விதனாச் செயற்பாடுகள், போட்டிகள் அனைத்தும் ஆவணப் பதிவுக்கானதேயன்றி மாணவர்களின் ஆளுமையை வெளிப்படுத்தவதற்கானதல்ல என்பதை அடித்துக்கூற முடியும்.

இங்குதான் எங்கள் பிள்ளைகள் பிறழ்வான வழிப்படுத்தலில் நாட்டம் கொள்கின்றனர்.

எனவே இன்றைய விஜயதசமியில் எங்கள் பிள்ளைகளை பல்வகை ஆளுமை கொண்ட மாணவர்களாக ஆக்குவோம் என்று சத்தியம் செய்வோம்.

# சர்வதேச அழுத்தம் மூலம் தமிழர்களுக்கு தேவையானதை பெற்றுக்கொடுக்க வேண்டும்

## நியூசிலாந்து தூதுவரிடம் மாநகர முதல்வர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச அழுத்தம் மூலம் தமிழ் மக்களுக்கு தேவையான விடயங்களை பெற்றுக் கொடுக்க வேண்டும் என நியூசிலாந்து தூதுவரிடம் யாழ். மாநகர முதல்வர் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் மற்றும் நியூசிலாந்து நாட்டுத் தூதுவர் மிக்கல்அபேல்டன்ஆகியோருக்கு இடையில்சந்திப்பொன்று, யாழ். மாநகர சபையில் நேற்று இடம் பெற்றது.

குறித்த சந்திப்பின் போது, உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பிலும்,யாழ். மாநகர சபையின் கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் தூதுவர் விரிவாக கேட்டறிந்து கொண்டார்.

இதன் போது மாநகர முதல்வர்,

நாட்டில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடைபெறாமல் உள்ளது. குறிப்பாக நீண்ட காலமாக மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெற்றமல் உள்ளது.

2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தல்க்கள் நடைபெற்ற பின்னர், நான்கு வருடங்களுக்கு பின்னர் இம்முறை தேர்தல் நடைபெறவேண்டும்.

ஆனால் தற்போது வரை அதற்கான எந்த நடவடிக்கையும் அரசு முன்னெடுக்கவில்லை. பாராளுமன்றம் கலைக்கப்பட்டு.புதிய அரசு ஒன்று அமைய வேண்டும் என்றே மக்கள் விரும்புகின்றனர்.ஆகவே இவ்வாறான தேர்தல்கள் நடைபெறுவதற்கு நியூசிலாந்து அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றார்.

இலங்கை அரசுக்கு எதிராக கொழும்பில் இடம் பெற்ற போராட்டங்களில் தமிழ் மக்கள் ஏன் கலந்து கொள்ளவில்லை என தூதுவர் வினவினார்.

இதற்கு பதிலளித்த யாழ். மாநகர முதல்வர்,

வெறுமனே முகங்கள் மாறுவதை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ் மக்களின் பிரச்சினைகள் ஆராயப்பட்டு, அடிப்படை உரிமைகள் கிடைக்கப்பெற வேண்டும். மகிந்த போன பின்னர் ரணில் வருவது என்ற செயற்பாடுகளை தமிழ் மக்கள் தமது தீர்வுக்கான வழியாக நினைக்கவில்லை.

இதனால் தமிழ் மக்கள் கொழும்பில் இடம் பெற்ற அரசுக்கு எதிரான போராட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்றார்.

இது தவிர சர்வதேச அழுத்தம் மூலம் தமிழ் மக்களுக்கு தேவையான விடயங்களை பெற்றுக் கொடுக்க வேண்டும். பொருளாதார பிரச்சினைக்கு புலம் பெயர் உறவுகள் உதவி செய்வதற்கு தயாராக உள்ளனர்.

அதற்கு தமிழ் மக்களுக்கு சமஸ்டி அடிப்படையிலான தீர்வை அழுத்தங்கள் மூலம் பெற்றுத் தர வேண்டும். அரசால் நிர்மூலமாக்கப்பட்ட கட்டடம் இப்போது பொருளாதார பிரச்சினையால் இடைநடுவே நிற்கிறது. அதனை சீர் செய்வதற்கு உதவி செய்ய வேண்டும்.

இந்திய நிதிப் பங்களிப்பில் அமைக்கப்பட்ட கலாசார மண்டபம் மாநகர சபைக்கு ஒப்படைக்கப்பட்டு அதன் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட வேண்டும்.

அதே போன்று பலாலி விமான நிலையம் மக்கள் பாவனைக்கு விடப் பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளையும் மாநகர முதல்வர் தூதுவருக்கு முன்வைத்தார்.

முடியுமான அழுத்தங்களை கொடுத்து மக்கள் இயல்பு வாழ்க்கை வாழ வழி செய்வோம் என தூதுவர் இதன்போது உறுதி மொழி வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட தூதுவர் யாழ். பொது நூலகம் உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்கு விஜயம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## அச்சுவேலியில் கசிப்புடன் ஒருவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரிய பொக்கணை பகுதியில் 30 லீற்றர் கசிப்புடன் 39 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன் துறை விசேட குற்றத்தடுப்பு பிரிவினரின் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது குறித்த நபர் கசிப்பினை வீதியில் கொண்டு சென்றவேளை அவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கசிப்புடன் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் கையளிக்கப்பட்டுள்ளார். அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ம-7,104)

## ஐ.எம்.எப் ஒப்பந்த விபரம் உரிய நேரத்தில் வெளியிடப்படும்

### பிரதமர் தினேஷ் குணவர்தன

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் குறித்த உடன்படிக்கை தொடர்பான விபரங்கள் உரிய குழுக்களுக்கு வழங்கப்படும் என பிரதமர் தினேஷ் குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்ற அமர்வின் போது சர்வதேச நாணய நிதியத்துடனான பணியாளர் மட்ட ஒப்பந்தம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடலின் பின்னரான நகல் ஒப்பந்தம் இருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார். (ம-7)

## அராலி வடக்கில் மோ.சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

அராலி வடக்கிலுள்ள வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வீட்டு உரிமையாளர் கோவிலுக்குச் சென்றிருந்ததை அவதானித்த திருடர்கள் மின்சாரம் தடைப்பட்டிருந்த வேளை மேற்படி பல்சர் ரக மோட்டார் சைக்கிளைத் திருடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.(ம-7)

## மின்சாரம் தடைப்படும்



உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** ஓமினி அலுமினியம் தொழிற்சாலை-கரந்தன், அரசகேசரி பிள்ளையார் கோவிலடி, நீர்வேலி, கரந்தன், மாலை வைரவர் கோவிலடி, போயிட்டி, பொக்கணை, ஊரெழு அம்மன் கோவில் கோப்பாய் கைதடி வீதி Maravan pulo wind power plant ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக்குளம், மறக்கறம்பளை-கணேசபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் போதைவஸ்து தாக்கம் மற்றும் தென்னையுடன் கூடிய வீட்டுத் தோட்ட செய்கையை ஊக்குவிக்கும் முகமாக தென்னை பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் ஆன்மிக அறக்கட்டளையின் நிதி அனுசரணையுடன் விழிப்புணர்வு கருத்தரங்கானது நாளை இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் காலை 8 மணிக்கு ஸ்கந்தவரோதய பாடசாலை மண்டபத்திலும் பிற்பகல் 2 மணிக்கு குரும்பச்சிட்டி கிராமத்திலும் நாளை மறுதினம் காலை 8 மணிக்கு யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மண்டபத்திலும் 10 மணிக்கு மகாஜன பாடசாலை மண்டபத்திலும் பிற்பகல் 2 மணிக்கு கீரிமலை நல்லிணக்க மண்டபத்திலும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் பயனாளிகளுக்கு தென்னங்கன்று, காய்கறி விதைப்பைக்கற்றுகளும் விநியோகிக்கப்படவுள்ளன. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 92

**உக்ரைனுக்கு அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் ஆதரவு தெரிவித்தன. 8,500 இராணுவ வீரர்களை உக்ரைனுக்கு அனுப்ப அமெரிக்கா தயார் நிலையில் வைத்தது. நேட்டோ படைகள் கிழக்கு ஐரோப்பாவில் படைகளை குவிக்கத் தொடங்கின. இதனால், போர் மேகங்கள் சூழ்ந்தன.**

ஆனால், மொஸ்கோ - வோஷிங்டன் இடையே அடுத்தடுத்து நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியிலேயே முடிந்தன. ரஷ்யாவின் மிக முக்கியமான பாதுகாப்பு கோரிக்கைகளுக்கு அமெரிக்கா பதிலளிக்கவில்லை என்றாலும், பேச்சுவார்த்தை இன்னும் தயாராகவே இருப்பதாக ரஷ்யா தெரிவித்தது.

இதனிடையே, இந்தியா உட்பட உலக நாடுகள் உக்ரைனில் இருந்து தங்களது நாட்டு மக்களை வெளியேற வலியுறுத்தின. மேற்கத்தேய நாடுகள் பதற்றத்தை உருவாக்க வேண்டாம். இதனால் எங்களின் பொருளாதாரம் பாதிக்கப்படும் என உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி கேட்டுக் கொண்டார். அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும்தான் போர் பதற்றத்தை அதிகரிப்பதாக ரஷ்யா குற்றம் சாட்டியது.

மேலும், உக்ரைன் மீது தாக்குதல் நடத்த ஏதுவாக எல்லையில் படைகளை ரஷ்யா கட்டமைத்துவிட்டதாக அமெரிக்க ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டன. அதேசமயம், ரஷ்யா நிச்சயமாக உக்ரைன் பிரச்சினையைப் பெரிதாக்காது என்று அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடினுடனான பேச்சுவார்த்தைக்கு பின்னர் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரோன் தெரிவித்தார்.

இந்த நிலையில், ரஷ்ய ஜனாதிபதி புடினுடன், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் காணொலி வாயிலாக நேரடியாகப் பேசினார். அப்போது உக்ரைன் விவகாரத்தில் பேச்சுவார்த்தை மூலமாகவே தீர்வு காணப்பட வேண்டும் என்று ஜோ பைடன் தெரிவித்ததாக வெள்ளை மாளிகை தெரிவித்தது. உக்ரைன் நேட்டோவில் இணைக்கப்படக்கூடாது. கிழக்கு ஐரோப்பாவில் இருந்து நேட்டோ படைகள் திரும்பப்பெறப்பட வேண்டும் என்று புடின் திட்டவட்டமாக தெரிவித்ததாக க்ரெம்ளின் செய்தி வெளியிட்டது.

அதன் தொடர்ச்சியாக உக்ரைன் எல்லைப் பகுதியில் குவிக்கப்பட்டிருந்த தனது படைகளில் சிலவற்றை பாசறைக்குத் திரும்புமாறு ரஷ்ய இராணுவத் தலைமை உத்தரவிட்டது. இதனால் போர் பதற்றம் சற்று தணிந்தது.

**உக்ரைன் விவகாரத்தில் பதற்றத்தை உண்டாக்கி பேச்சுவார்த்தை நிலையை கொண்டு வந்து தங்களுக்கு தேவையான விடயத்தை சாதித்துக் கொள்ளவே ரஷ்யா விரும்பும் உக்ரைனை முழுமையாக கைப்பற்ற ரஷ்யா நினைக்காது என்று இரு நாட்டு விவகாரங்களை அறிந்தவர்கள் கூறினார்கள்.**

**ரஷ்யா - உக்ரைன் இடையேயான மோதல் கால வரிசை**

**செப்டம்பர் 14, 2020**
உக்ரைனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி நேட்டோவுடன் கூட்டுச் சேரும் உக்ரைனின் புதிய தேசிய பாதுகாப்பு உத்தியை அங்கீகரித்தார்.

**நவம்பர் 10, 2021**
உக்ரைனின் எல்லைகளுக்கு அருகே ரஷ்ய துருப்புக்களின் அசாதாரண நடமாட்டத்தை அமெரிக்கா அறிவித்தது.

**நவம்பர் 28,2021**
உக்ரைன் தன் எல்லையில் ரஷ்யா 92,000 ரஷ்ய துருப்புகளைக் கட்டியெழுப்புவதாக அறிவித்தது.

**டிசெம்பர் 7, 2021**
அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ரஷ்யா உக்ரைனைத் தாக்கினால், "வலுவான பொருளாதார மற்றும் பிற நடவடிக்கைகள்" எடுக்கப்படும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு எச்சரித்தார்.

**டிசெம்பர் 17, 2021**
புடின், உக்ரைன் எப்போதும் நேட்டோவில் சேருவதைத் தடை செய்தல் உட்பட கிழக்கு ஐரோப்பாவில் நேட்டோவின் செயற்பாடுகளுக்கு வரம்புகளை முன்மொழிந்தார். ஆனால் அவை நிராகரிக்கப்பட்டன.

**ஜனவரி 14, 2022**
உக்ரைன் நாட்டு இணையத் தளங்களை முடக்கும் செயல் அரங்கேற்றப்பட்டது.

**ஜனவரி 17, 2022**
உக்ரைனின் வடக்குப் பகுதியில் உள்ள பெலாரஸ் நகருக்கு கூட்டு பயிற்சிக்காக ரஷ்யப் படைகள் வரத் தொடங்கின.

**டிசெம்பர் 7, 2021 இல் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ரஷ்யா உக்ரைனைத் தாக்கினால், "வலுவான பொருளாதார மற்றும் பிற நடவடிக்கைகள்" எடுக்கப்படும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடி மிர் புடினுக்கு எச்சரித்தார்.**

# சுமார் 5 இலட்சம் பேருக்கு நிரந்தர ஓட்டுநர் உரிமம் இல்லை

(கொழும்பு)

இதுவரை சுமார் 5 இலட்சம் பேருக்கு நிரந்தர ஓட்டுநர் உரிம அட்டை வழங்க முடியவில்லை என மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் உரிய அட்டைகள் இல்லாத காரணத்தினால் அவர்களுக்கு தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

சுமார் 10 இலட்சம் அட்டைகள் முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் முதல் தொகுதியாக 5 இலட்சம் அட்டைகள் இம்மாதம் கிடைக்




கப்பெறும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக 43 மில்லியன் ரூபாய் செலவிடப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ)

# மக்காச்சோள இறக்குமதிக்கு விவசாய அமைச்சு அனுமதி



...(கொழும்பு)

மக்காச்சோள இறக்குமதிக்கு அனுமதி

வழங்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் படி, இந்தியாவில் இருந்து 2 இலட்சத்து 25 ஆயிரம் மெற்றிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், கால்நடை தீவன விலைகள் ஓரளவு குறையும் என அமைச்சர் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 300 | 280 | 350 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 220 | 250 | 250 | 300 |
| தக்காளி | 250 | 250 | 260 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 250 | 250 | 200 |
| கோவா | 450 | 400 | 400 | 450 |
| கரட் | 250 | 400 | 400 | 450 |
| பூசணி | 200 | 150 | 160 | 200 |
| புடோல் | 200 | 200 | 160 | 250 |
| வாழைக்காய் | 200 | 160 | 140 | 140 |
| சின்ன வெங்காயம் | 400 | 400 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 180 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 600 | 700 | 600 | 600 |
| வெண்டிக்காய் | 180 | 200 | 140 | 240 |
| கருணைக் கிழங்கு | 180 | 180 | 200 | 200 |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 | 350 |
| லீக்ஸ் | 300 | 300 | 300 | 350 |
| பீற்றூட் | 180 | 280 | 320 | 320 |
| கறிமிளகாய் | 800 | 700 | 650 | 700 |
| முருங்கைக்காய் | 800 | 500 | 500 | 800 |
| போஞ்சி | 600 | 400 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | -- | 320 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 150 | 100 |
| தேசிக்காய் | 600 | 400 | 500 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 80 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 250 | 200 | 280 |
| வெங்காயப்பூ | 450 | 400 | 400 | 480 |
| முள்ளங்கி | 120 | 200 | 160 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 30 | 20 | 50 | 50 |
| ஈரப்பலா | 150 | 150 | 120 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோதுமை மா...

கோதுமையை இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் ஒரு கிலோ கிராம் கோதுமை மாவிற்கான விலையை 13 ரூபாயினால் அதிகரித்துள்ளன.

இதனால் வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலையை அதிகரிக்க நேரிட்டுள்ளதாகவும் அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத் தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரி வித்தார்.

இதற்கமைய் பாண் ஒரு இறாத்த லின் விலை மேலும் 10 ரூபாயினால் அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் கோதுமை மாவின் விலையை 250 ரூபாயினால் குறைக்க வுள்ளதாக நேற்றைய தினம் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரி வித்திருந்தார். (ம-7)

## கையடக்கத்...

வகையான கையடக்க தொலைபேசிகள் மற்றும் துணை சாதனங்களின் விலை மீண்டும் உயரும் என அகில இலங்கை தொடர்பாடல் நிலைய உரிமையாளர் கள் சங்கம் தெரிவித்துள்ளது.

புதிய வருடாந்த வருமானம் 10 மில்லியன் ரூபாயுக்கும் அதிகமான வரு மானத்தை பெறும் வர்த்தகர்களுக்கு சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி அற விடப்படுகிறது.

அரசாங்கம் சமூக பாதுகாப்பு பங்க ளிப்பு வரியை 2.5 வீதம் என்று அறிவித் துள்ளது. எனினும் தயாரிப்பு வாடிக் கையாளரை சென்றடையும்போது, அது கிட்டத்தட்ட 5 வீதமாக இருக்கும் என்றும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனால், கையடக்கத் தொலை பேசிகள் மற்றும் துணைப் பொருட் களின் விலைகள் மீண்டும் உயரும் என்பது உறுதியாகும் என்றும் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ம-7)


தன நிதானய
திகதி - 2022.10.04
சீட்டிழுப்பு இலக்கம் - 928
M 40 55 57 72
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

மஹஜன சம்பத
திகதி 2022/10/04
சீட்டிழுப்பு இலக்கம் 4898
N 1 6 4 7 0 8
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.10.04
சீட்டிழுப்பு இலக்கம் 207
கும்பம் 18 28 35 50 கும்பம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 04/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1246
V 16 04 20 76 77

கொவிசெத
திகதி 2022.10.04
சீட்டிழுப்பு இலக்கம் 3140
J 28 45 79 80
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 04/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1353
வெற்றி இலக்கங்கள்
மேஷம் 4 7 6 6 5 5
தேசிய லொத்தர் சபை


## உணவுகளின்...

சோற்று பொதி ஒன்றின் விலை 10 ரூபாயினால் அதிகரிக்கப்படவுள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை உணவக உரிமை யாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் இதனைத் தெரிவித்துள்ளார்.

சமூக பாதுகாப்பு மானியங்கள் மற் றும் உணவுப் பொருட்கள் அதிகரிப்பு காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட் டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேநீர் மற்றும் அப்பம் போன்றவற் றின் விலை உயர்த்தப்படாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## ஆண் ஒருவரின்...

யில் அடையாளம் காண முடியாத சட லம் ஒன்று கரை ஒதுங்கி உள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸார் தெரி வித்தனர்.

காலை மீன்பிடி நடவடிக்கைக்கு சென்ற மீனவர்கள் சடலம் ஒன்று கரை ஒதுங்கி இருப்பது தொடர்பில் வட்டுக் கோட்டை பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீத வான் விசாரணைகளை மேற்கொண்டார்.

சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறை யில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7,104)

## எரிவாயு...

எடையுள்ள லிட்ரோ உள்நாட்டு சிலிண் டரின் விலை இன்று நள்ளிரவு ரூ.200-300 வரை குறைக்கப்படவுள்ளது.

ஏனைய லிட்ரோ எரிவாயு சிலிண்டர் களின் விலைகளும் விகிதாசார அடிப் படையில் குறைக்கப்படும் என லிட்ரோ தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள் ளார். (ம-7)

## எரிபொருள்...

படாது என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர டுவிட் டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

மக்கள் அநாவசியமாக அச்சத்தை ஏற்படுத்திக் கொள்ள தேவையில்லை என அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, நேற்றுக் காலை 8 மணி முதல் நாடளாவிய ரீதியில் எரி பொருள் முற்பதிவு நடவடிக்கையில் இருந்து விலகவுள்ளதாக பெற்றோ லிய விநியோகஸ்தர்கள் சங்கம் அறி வித்துள்ளது.

விநியோகஸ்தர்களுக்கு வழங்கப் பட்ட தள்ளுபடியில் 45 வீதத்தை மீள அறவிடுவதற்கு பெற்றோலியக் கூட் டுத்தாபனம் நடவடிக்கை எடுத்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## நாட்டின்...

ரணில் விக்கிரமசிங்க நாளை 6ஆம் திகதி பாராளுமன்றத்தில் விசேட உரை நிகழ்த்தவுள்ளார்.

ஜனாதிபதி ஆற்றவுள்ள உரை தொடர் பில் ஆளும் கட்சி உறுப்பினர் களுக்கிடையிலான சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

சமகால பொருளாதார நிலைமை மற்றும் சர்வதேசத்தின் ஒத்துழைப்பு குறித் தும் ஜனாதிபதி தனது விசேட உரை யில் கருத்துக்களை முன்வைக்கவுள் ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், ஜனாதிபதியின் விசேட உரை தொடர்பில் பாராளுமன்றத்தில் விவா தம் நடத்தவும் சந்தர்ப்பம் வழங்கப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## போதை...

வதற்கு முன்னர் அனைத்து பாரா ளுமன்ற உறுப் பினர்களும் பரி சோதிக்கப்பட வேண்டும் என அவர் கோரி க்கை முன்வைத் துள்ளார்.

புனர் வாழ்வு பணியகம் என்ற சட்டமூலத்திற்கு தனது எதிர்ப்பை தெரிவித்த அவர், புதிய சட்டம் அர சாங்கத்திற்கு எதி ரான போராட்டங் களை நசுக்கவே கொண்டு வரப் படுகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலை யில் தேவையான பரிசோதனைக்கு முதலில் தன்னை உட்படுத்துவதாக சஜித் பிரேமதாஸ உறுதியளித்தார். (ம-7)

## ராஜ...

நாட்டின் சம கால நிலைமை தொடர்பில் ஊட கங்களுக்கு வழங்கி செவ்வியிலேயே இதனைத் தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை தற் போது அதல பாதாளத்துக்கு சென்று கொண்டி ருக்கிறது.

நாட்டின் மக் கள் பசியாலும் பட்டினியாலும் வாடிக் கொண்டி ருக்கின்றனர்.

நாடு தற்போது முழு வங்கு ரோத்து நிலை யில் உள்ளது.

இதற்கு முழு மையான கார ணம் ராஜபக்ஷக் கள் மட்டுமே. இதனை யாரா லும் மறுக்கவே முடியாது என சந் திரிகா குமார துங்க தெரிவித் தார். (ம-7)

## பல்கலை...

வைத்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-7)

## உயர் பாதுகாப்பு...

பீரிஸ் தெரிவித்தார்.

இலங்கையில் அண்மையில் வெளி யிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மிக வும் ஆபத்தானதும் முற்றிலும் சட்ட விரோதமானதுமான வர்த்தமானி அறி வித்தல் என்றும், அது நடைமுறைப் படுத்தப்பட்டால் கொழும்பு முழுமை யான இராணுவத் தளமாக மாறும் என வும் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். (ம-7)


SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1873 | நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.10.04 | தினம் செவ்வாய்க்கிழமை
X 08 34 56 58
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,918,780/-

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.10.04
சீட்டிழுப்பு இல : 4034
வர்ணம் : இள நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,812,400/-
வெற்றி இலக்கங்கள் 16 21 39 67 ஆங்கில எழுத்து Y
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 231
சீட்டிழுப்பு திகதி 2022.10.04
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 07 13 41
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,145,820/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,303,959.20
திகதி 2022-10-04
வெற்றி வாரம் 3585
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 10 34 53 60 சிம்மம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 8,824,320/-

வெற் 26 லக்ன
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
F 17 10 25 61 75
சீட்டிழுப்பு வாரம் 1049
வர்ணம் இளஞ்சிவப்பு
2022.10.04 செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 267,009,323.80
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல : 1699
வர்ணம் : இள நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2022.10.04
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,802,260/-
வெற்றி இலக்கங்கள் 15 34 48 72 ஆங்கில எழுத்து D

நயினை நாகபூசணி அருளுடன்
வெற்றிப் பரிசுகள் தொடர்கின்றன
கடந்த 29.08.2022 அன்று சுப்பர்பரிசு ராசி அதிஸ்டம் (DLB அபிவிருத்தி லொத்தர் சபை) வெல்லப்பட்டது. அடுத்து 03.10.2022 அன்று ராசிசுபபலன் ஐந்து லட்சம் (NLB தேசிய லொத்தர் சபை) வெல்லப்பட்டது.
அதேதினம் கோடிபதி கப்ருக ஒரு இலட்சம் (அபி விருத்தி லொத்தர் சபை DLB) வெல்லப்பட்டது.
யாழ்.முகவர்
கனகலிங்கம் திலகவதி
இல.4.K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
(13003)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்பு

அரசினால் அங்கீகரிக்கப்பட்ட எமது WEC நிறுவனமானது தனது புதிய கிளைகளை வடமாகாணத்தில் நிறுவவுள்ளதால் பல பதவி வெற்றிடங்களை பூர்த்தி செய்யவுள்ளோம். அதனால் இவ் அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

**பதவி வெற்றிடங்கள் : - எழுதுனர், மேற்பார்வையாளர், கணக்காளர்,வரவேற்பாளர், உதவி முகாமையாளர், முகாமையாளர் தகைமைகள் :-** O/L, A/L மற்றும் மேற்தகைமை

பயிற்சியின்போது 22,500-35 வரையும் பயிற்சியின் பின் 55,00-80,000 வரையும் பெற்றுக் கொள்ளலாம்.

- தங்குமிடம் இலவசம்
- ETF, EPF பெற்றுக்கொள்ளமுடியும்.
- மருத்துவ வசதி, வெளிநாட்டு சுற்றுப் பயணங்கள்.

(13007)

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

**076 940 4151**
**077 298 6763**


## மரண அறிவித்தல்



## ஞானசுந்தரம் உதயசங்கர் (மோகன்)
### (மோகன் சவுண்ஸ் உரிமையாளர்)

பத்திரகாளி அம்மன் கோவில் வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஞானசுந்தரம் உதயசங்கர்(மோகன் - மோகன் சவுண்ஸ் உரிமையாளர்) அவர்கள் நேற்று (04.10.2022) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத் தரப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்திரகாளி கோவில் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

077 984 8963
077 666 0524

தகவல்:
குடும்பத்தினர்

(13000)

## மரண அறிவித்தல்

மண்ணில்
13 – 09 – 1945



விண்ணில்
03 – 10 – 2022

## திருமதி அரியமலர் இராமநாதன்

யாழ். காரைநகர் வீக்காவில் ஆலடியைப் பிறப்பிடமாகவும் கல்லூரி வீதி மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட அரியமலர் இராமநாதன் அவர்கள் நேற்று முன்தினம் (03.10.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணை - செல்லி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை இராமநாதன் அவர்களின் அன்பு மனைவியும் வாசன்(லண்டன்), வாசுகி(ஆசிரியை- யா/ மானிப்பாய் சென் ஆன்ஸ் றோ.க.த.க பாடசாலை), வனஜா (ஆசிரியை - யா/ சில்லாலை றோ.க.த.க பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் சயானி(லண்டன்), ஜெயக்குமார் (மொழி பெயர்ப்பாளர்- சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்), றஞ்சித் (றஞ்சித் மோட்டோர்ஸ் உரிமையாளர் - மானிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியாரும் புஷ்பவதி(இளைப்பாறிய ஆசிரியை), லலிதா(சுவிஸ்), பத்மினி(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற முத்துலிங்கம்(ஆசிரியர்), சரவணமுத்து(சுவிஸ்), பன்னீருகரம்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் பபிஷன்(லண்டன்), நவீனயா, சபீஷ், ரோகித் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் எழிலாசினி, ரமணன், றஞ்சித், பாமிதன்(சுவிஸ்), பார்த்திபன் (சுவிஸ்), பபிதா(சுவிஸ்), காயத்ரி(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.10.2022) புதன்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பிப்பிலி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வாசன் : 0044 7817 705 021 (மகன்)
வாசுகி : 0094 7767 051 07 (மகள்)
வனஜா: 0094 7705 491 68 (மகள்)

(12995)

தகவல்:
குடும்பத்தினர்


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12989)

**076 825 7716** (ஆகாஸ்)


## யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்
### வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 16.10.2022 ஞாயிற்றுக் கிழமை மாலை 4.00 மணிக்கு கல்லூரி பேச்ஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளதை தங்களுக்கு அறிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். அனைத்துப் பழைய மாணவர் சங்க உறுப்பினர்களும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன். தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளுக்கான வேட்புமனுக்களும் பிரேரணைகளும் 12.10.2022 புதன்கிழமை பி.ப 5.00 மணிக்கு முன்பாக கீழ்க்காணும் முகவரியில் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிகளுக்கான வேட்புமனுக்கள் கிடைக்கப்பெற்றதும் 13.10.2022 வியாழக்கிழமை நடைபெறவிருக்கும் நிர்வாக சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டபின் பொதுச்சபையின் அங்கீகாரத்துக்கு விடப்படும்.

அனைத்து பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

T.M.Multi Mart
இல.210, பொன்னாலை வீதி,
கட்டுடை, மானிப்பாய்.

(13005)

திரு.தி.தயாளன்
செயலாளர்


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தாவடி சந்திக்குஅருகாமையில் 2 பரப்பு காணி விற்பனைக்கு**

- K.K.S வீதியில் இருந்து இரண்டாவது காணி
- பார்வையிடும் நேரம்:- காலை 9.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(13006)

**076 755 8606**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

### பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி முதல்
மாலை 6.00 மணிவரை

**தரகர் தேவையில்லை**

(12988)

தொடர்புகளுக்கு - ஜெயம்

**077 814 7389, 077 241 7589**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.